1-1 JAN 1956

# ஆரம்பக்கல்வி



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

மலர் 15 } ஜூலை 1954 { இதழ் 7

## நாட்டை மகிழ்விக்கும் நல்லதோர் திட்டம்

பத்தாண்டுக் காலத்திற்குள் 5 வயது முதல் 14 வயது வரையுள்ள எல்லாச் சிறுவர் சிமியர்கட்கும் ஆரம்பக் கல்வியைப் பயில்வதற்கான வசதிகளை மாகாண அரசாங்கங்கள் செய்தாக வேண்டியது அவற்றின் கடமை என்று இந்திய அரசியல் திட்டம் தெரிவிக்கிறது.

அந்தத் திட்டம் இந்த விதமாகத் தெரிவித்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன.

என்றாலும் மாகாண அரசாங்கங்கள் இந்தத் துறையில் இதுவரை எத்தகைய கவனமும் செலுத்தியதாகத் தெரியவில்லை.

மற்ற மாகாணங்களின் நிலை எப்படி இருந்தாலும், நம்முடைய மாகாண அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இந்தத் துறையை

அடியோடு அலட்சியம் செய்து விட்டது நமது மாகாண ஆட்சி என்றே நாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தியா விடுதலை பெற்றவுடனே இந்தத் துறையில் அதிதீவிர அக்கறை காட்டப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

முன்பு இந்த நாட்டை ஆண்டவன் வெள்ளைக்காரன்—அவனுக்கு, இந்த நாடு ஓங்கி வளரவேண்டுமென்பதிலே அக்கறை இருக்க முடியாது—ஆனால் இப்போது இந்த நாட்டை ஆள்பவர்கள் நம்மவர்கள்—எனவே இவர்களுக்கு இந்த நாடு வளரவேண்டுமென்பதிலே பேரவல் இருப்பது இயற்கை என்று நாம் மனமார எண்ணினோம்.

நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதை, மற்றவர்கள் அறிந்திருப்பதுபோலவே, மாகாண ஆட்சியாளர்களும் அறிந்திருப்பார்கள்—ஆகவே அவர்கள் ஆரம்பக்கல்வியை விரைந்து பரவுவதற்கான வழிவகைகளைச் செய்வார்கள் என்று நமது உள்ளம் திட்டவட்டமாக நம்பி எதிர்பார்த்தது.

மாகாண அரசாங்கங்கள், தாமாக முன்வந்து இந்த நற்பணியைச் செய்யட்டும் என்று விட்டுவிடாமல், இந்திய அரசியல் திட்டம் அதுவாக முன்வந்து, மாகாண அரசாங்கங்களைப் பார்த்து, அன்புடையீர்—அன்புடையீர்—மறந்துவிடாதீர் இப்பணியை என்று அறிவுறுத்திய காட்சியைக் கண்டபோது, "இனிப்பயமில்லை ஜெயமுண்டு மனமே—ஆரம்பக் கல்வி எங்கெங்கும் பரவிவிடும் இன்மேல்" என்று நம் நெஞ்சு பரவசகீதம் பாடிடலாயிற்று.

ஆனால் என்ன ஆச்சரியம், நமது நம்பிக்கையாகவே இருந்து விட்டது. நடைமுறை நாதமாக மாறவில்லை.

அரசியல் திட்டத்தின் கட்டளை, அலங்கார அடுக்குச் சொல் மாளிகையாகவே அமைந்துவிட்டது. காரியத்தில் காட்சிதரும் கருத்துள்ள பகுதியாக உருவடையவில்லை.

இந்தியாவுக்கு விடுதலை என்பது, வெள்ளைக்காரனின் அரசியல் பிடியிலிருந்து விடுதலை என்கிற நிலையோடு முற்றுப்புள்ளி பெற்றுவிட்டது. மக்களின் எழுத்தறிவின்மை என்கிற பயங்கர இருளிலிருந்து விடுதலை என்கிற எழில்மிகு நிலைமை பிறக்காமலே போய்விட்டது.

1947-ம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது.

இப்போது நடப்பது 1954-ஆம் ஆண்டு.

இடையே மறந்தவை ஏழு ஆண்டுகள். ஆமாம் —ஏழு ஆண்டுகள் மறைந்துவிட்டன. என்றாலும் எழுத்தறிவின்மை மறையவில்லை. அதனை மறைய வைப்பதற்கான முயற்சிகளும் அரும்பவில்லை.

நம்மை நாமே ஆள்கிறோம்—நடப்பது நமது ஆட்சி—என்றாலும் கல்வியொளி எங்கெங்கும் பரவவில்லையே—படிக்காதவர் தொகை இன்னமும் 100–க்கு 85 என்கிற பயங்கர விகிதத்தில் இருக்கின்றதே—ஈதென்ன கொடுமை என்பதை எண்ணி எண்ணி நாம் பலமுறை வருந்தியிருக்கிறோம்.

சென்ற ஆண்டிலே, அன்பர் ஆச்சாரியார், கல்லாமையை ஒழிப்பதற்கான கரும்பு போன்ற திட்டம் என்று கூறிக்கொண்டு, புதியதோர் ஏற்பாட்டைப் பள்ளிகளில் நுழைத்தார். ஆனால் இந்த ஏற்பாடோ, அவர் இயம்பியதுபோல, அறியாமையை ஒழிப்பதற்கான அருமையான திட்டமாக இல்லாமல், எழுத்தறிவின்மையும் ஜாதிக் கொடுமையும் நீர் ஊற்றி வளர்க்கவல்ல நச்சுத்தன்மை நிறைந்ததாக இருந்தது. எனவே அதனை ஆதரிக்க முடியவில்லை; நம்மால் முழுமூச்சோடு எதிர்த்து நின்று ஒழிக்க வேண்டியிருந்தது அதனை.

இவ்வாறாக இதுவரையில் ஆரம்பக்கல்வியைப் பற்றிச் சென்னை அரசாங்கம் கொண்டிருந்த போக்கு, வருத்தத்தைத்தான் மூட்டுவதாக இருந்தது. மகிழ்ச்சியை அளிப்பதாக இல்லை,

ஆனால் இப்போதுதான் முதல்முறையாக நாட்டவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டவல்ல நல்லதோர் திட்டத்தைத் தீட்டியிருக்கிறது சென்னை அரசாட்சி.

இந்தப் புதிய திட்டத்தின்படி, இரண்டோர் மாதங்களுக்குள், 1250 புதிய ஆரம்பப் பள்ளிகள் நமது மாகாணத்தில் தொடங்கப்படும்.

இந்த ஆரம்பப் பள்ளிகள் இதுபோது ஒற்றையாசிரியர் பள்ளிகளாக இருக்கும். அதாவது ஒவ்வோர் பள்ளிக்கூடத்திற்கும் ஒவ்வோர் ஆசிரியரே இருப்பார்.

இந்தப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஒன்று முதல் ஐந்தாவது வரையுள்ள வகுப்புகள் தொடங்கப்படும்.

முதலில், 1000 பேருக்குமேல் மக்கள் தொகை கொண்ட எந்தெந்தக் கிராமங்களில் தற்போது ஆரம்பப் பள்ளிகள் இல்லாமலிருக்கின்றனவோ அந்தக் கிராமங்களிலெல்லாம் பள்ளிகள் தொடங்கப்படும்.

அப்படித் தொடங்கப்படுகின்ற புதிய பள்ளிகளின் எண்ணிக்கை 1250-ஐ விடக் குறைவாக இருந்தால், இப்படிக் குறையும் எண்ணிக்கைக்கு ஏற்ற பள்ளிகள், 500-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் ஏற்படுத்தப்படும்.

முதலில், 1000 பேருக்குமேல் மக்கள் தொகையுள்ள எல்லாக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன என்கிற நிலையை ஏற்படுத்துவதும், அதற்குப் பிறகு அதே வகையாக, 500 பேருக்குமேல் மக்கள் தொகையுள்ள எல்லாக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்கள்.

இப்படி ஏற்படுத்தப்படுகின்ற 1250 பள்ளிகளுக்கான செலவுத் தொகையில் 100-க்கு 75 பங்கை முதல் ஆண்டிலும், 50 பங்கை இரண்டாவது ஆண்டிலும் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். நான்காவது ஆண்டிலிருந்து இப்பள்ளிகளுக்கான முழுச்செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

அவ்வாறாக உண்டாகின்ற பள்ளிக்கூடங்களில், எது எது எந்தெந்த ஜில்லாவில் உள்ளதோ அது அது அந்தந்த ஜில்லாபோர்டின் அதிகாரத்துக்கு உட்பட்டனவாக ஆக்கப்படும்.

இதுதான் புதிய திட்டத்தின் முதன்மையான பகுதிகள்.

இந்தத் திட்டத்தில் சிறுசிறு குறைபாடுகள் சில இருக்கின்றன என்றபோதிலும் மொத்தமாகப் பார்க்கிறபோது இந்தத் திட்டம், சிறப்புமிருந்தது—சீர்பல நிறைந்தது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இதுவரை பள்ளிக்கூடங்களே இல்லாமலிருக்கின்ற 1250 கிராமங்களில், இந்தத் திட்டத்தின் விளைவாக, புதிய பள்ளிகள் ஏற்பட இருக்கின்றன என்பது, இந்தத்திட்டத்தின் முதற்பெருஞ்சிறப்பு. இந்தத் திட்டத்தால் வேறு எந்தப் பயன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பள்ளிகளே இல்லாத 1250 கிராமங்களில் புதுப்பள்ளிகள் ஏற்படுவது மிகச் சிறந்த பயனல்லவா? அந்தந்தக் கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்கள் இதுபோது அநேகமாகப் படிப்பறிவற்றவர்களாகவே இருப்பார்கள். அவர்களில், வசதியுள்ள குடும்பங்களில் பிறந்த ஒருசிலர், தொலைவில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பள்ளிகளில் படித்து விட்டு வரக்கூடும். இப்படிப்பட்ட சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும். ஏனைய எல்லாச் சிறுவர் சிறுமியரும் இப்போது படிப்பறிவின்றி வீணே அலைந்துதிரிந்து தம் அரிய காலத்தைப் பாழாக்கிக் கொண்டுதான் இருப்பர் என்பதில் துளியும் ஐயமில்லை. இப்படிப்

பட்ட இளஞ்சிறுவர்கட்குக் கல்வி ஒளி பெறுவதற்கான வாய்ப்பையும் வசதியையும் இப்போது ஏற்படுத்தித் தருகிறது புதிய திட்டம்.

இந்தத் திட்டத்தின் இன்னொரு சிறப்பு, 1250 ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கிறது இந்தத் திட்டத்தின் விளைவாக. எனவே நாட்டிலே வேகமாக வளர்ந்துவரும் வேலையில்லாக் கொடுமையை ஓரளவு குறைக்க உதவுகிறது இந்தத் திட்டம். வேலையில்லாத மக்களின் எண்ணிக்கை விரைவாக வளர்வது நாட்டிற்குத் தீமையைத்தானே தரவல்லது? அந்தப் பேராபத்தைச் சிறிதளவுதான் குறைக்கிறது இந்தத் திட்டம் என்றாலும், சிறிதளவாவது குறைக்கிறதே, அந்த அளவுக்கு நாம் மகிழ்ச்சியடைவதில் குற்றமென்ன?

திட்டத்தின் மற்றொரு சிறப்பு, திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செலவில் ஒரு பகுதியை, முதல் மூன்றாண்டுகளுக்கு, மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன் வந்திருப்பதாகும். ஆரம்பக் கல்வியை அனைவர்க்கும் அளிப்பதற்கான முழுச்செலவையும் மாகாண அரசாங்கங்களே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற நிலைமை இது வரை இருந்துவந்தது. ஆரம்பக் கல்வி என்கிற துறை மாகாண அரசாங்கத்தைத் தானே சேர்ந்தது—இந்நிலையில் அத்துறையை நிர்வகிப்பதற்கான செலவில்மட்டும் மத்திய அரசாங்கத்திற்கு ஏன் பொறுப்பிருக்க வேண்டும் என்று, சில பலர், தவறுதலாக எண்ணி வந்தனர் இதுவரை. அந்தத் தவறான எண்ணத்தைத் தவிடுபொடியாக்குகிறது இந்தத் திட்டம். ஆரம்பக் கல்வி என்பது மாகாண அரசாட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற இலாகாவாக இருந்தாலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத இலாகா அது என்கிற காரணத்தால், ஆரம்பக் கல்வியை வளர்ப்பதற்கான செலவில் ஒரு பகுதியை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்வது, அவசியம் மட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தின் கடமையும் ஆகும். இந்தக் கடமையை மத்திய அரசாங்கம் இப்போதுதான் முதன்முறையாக உணரத் தொடங்கியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் மனப்போக்கில் ஏற்பட்டுள்ள இந்த முக்கியமான மாற்றத்தை நடைமுறை நன்மையாக ஆக்கியிருக்கிறது இந்தப் புதிய திட்டம். இந்த வகையிலேயும் திட்டம் நம்முடைய பாராட்டுதலுக்கு உரியதாக ஆகிறது.

இந்தத் திட்டத்தின்படி ஒவ்வோர் பள்ளிக்கும் ஒவ்வோர் ஆசிரியர்தானே இருக்கப் போகிறார்—ஒரே ஆசிரியரால் ஐந்து வகுப்புகளையும் எப்படி நிர்வகிக்க முடியும் என்று சிலர் குறுக்குக் கேள்வி வீசுகின்றனர்.

ஏன் முடியாது என்று நாம்கேட்க ஆசைப்படுகிறோம். ஒவ்வொரு வகுப்பிலும் 50 பிள்ளைகள் 60 பிள்ளைகள் என்கிற விகிதத்தில், ஐந்து வகுப்புகளுக்குமாகச் சேர்த்து 200 அல்லது 250 பிள்ளைகள் இருப்பார்களானால், அப்படிப்பட்ட நிலையில் எல்லாப் பிள்ளைகளையும்

ஒரே ஆசிரியரால் நிர்வகிப்பது என்பது இயலாத காரியம்தான் ஆனால் இப்போது ஏற்பட இருக்கிற பள்ளிகளின் நிலே அது அல்ல. வகுப்புக்கு எட்டுப் பேர் அல்லது பத்துப் பேர் வீதம் ஐந்து வகுப்புகளுக்குமாகச் சேர்த்து 50 அல்லது 60 மாணவர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். இந்த நிலேயில் அவர்கள் அனைவரையும் ஒரே ஆசிரியர் நிர்வகிப்பதில் அதிகச் சிரமம் இருக்கும் என்று நாம் கருதவில்லை. ஆனால் இந்தத் திட்டத்தின்படி உருவாகிற புதிய பள்ளிக்கூடங்களில், எந்தெந்தப் பள்ளிகளில், மாணவர்களின் தொகை, ஓர் ஆசிரியரால் நிர்வகிக்கக்கூடிய அளவுக்கு மேல் கூடி விடுகிறதோ அங்கெல்லாம், தேவையான அளவு ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம் துளியும் தயங்கக் கூடாது. மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறவரையில் ஒற்றையாசிரியர் என்கிற ஏற்பாடு சிறந்தது. ஆனால் எண்ணிக்கை அதிகப்பட்டு விடுகிற பள்ளிகளில் ஒற்றையாசிரியர் முறை சிறிதும் பயன்படாது. பல ஆசிரியர்கள் அங்கே இருந்தே தீர வேண்டும். மிக அதிக மாணவர்கள் இருக்கின்ற பள்ளிகளிலும் ஒற்றையாசிரியர் முறையை அரசாங்கம் கண்மூடித்தனமாக வற்புறுத்துமானால், அதனால், ஆசிரியர்களின் வேலைப் பளு அதிகமாகும்; அளிக்கப்படுகிற கல்வியின் தரம் குறைந்து போகும்; ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்க வேண்டிய அளவு கவனம் ஆசிரியரிடமிருந்து கிடைக்கமுடியாது. அப்படிப்பட்ட நிலேயில், பள்ளிகள் இருப்பதைவிட இல்லாததுமேல் என்று சொல்ல வேண்டிவந்தாலும் வரும். எனவே அரசாங்கம், மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிற வரையில் அல்லது அப்படி இருக்கிற இடங்களில் மட்டும் ஒற்றையாசிரியர் முறையை வைத்துக் கொண்டு, மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிற போது ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அதிகமாக்க வேண்டும்.

1918ம் ஆண்டில் மாண்ட் போர்டு சீர்திருத்தம் அமுலுக்கு வந்தபிறகு, ஆட்சிப்பீடம் ஏறிய நீதிக் கட்சியினர் எத்தனையோ கிராமங்களில் ஒற்றையாசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தினார்கள். அவை சிறந்த முறையிலேயே நடை பெற்றுவந்தன. சில பல ஆண்டுகளுக்குப் பிறகு, மாணவர்களின் தொகை அதிகமாக ஆக, ஆசிரியர்களின் தொகையையும் கூடுதலாக்கிக் கொண்டே வந்தார்கள். இந்த வகையில் ஒரே ஆசிரியரைக் கொண்டு முன்பு நீதிக்கட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட பல பள்ளிகள் இப்போது, பற்பல ஆசிரியர்களைக் கொண்டனவாக ஓங்கி வளர்ந்து சிறந்து பொலிகின்றன அதுபோலவே தான் இப்போது ஏற்படவிருக்கிற ஒற்றையாசிரியர் பள்ளிகளும் விரைவில் இரட்டை ஆசிரியர் பள்ளிகளாகவும் மூன்றாசிரியர்—நான்காசிரியர் பள்ளிகளாகவும் மாறியே தீரும். மாறத்தான் வேண்டும். மாறுகின்ற முறையில் தான் அரசாங்கமும் பணியாற்ற வேண்டும்

இந்தப் புதிய பள்ளிகளை நடத்துவதற்கான செலவில் ஒரு பகுதியை முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று இந்தத் திட்டம் தெரிவிக்கிறது. இந்த உதவி போதாது. குறைந்தது பத்து ஆண்டுகளுக்காவது, இந்தப் பள்ளிகளை நடத்துவதற்கான செலவில் சரிபாதியை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு வரவு அதிகம், செலவு குறைவு, ஆனால் மாகாண அரசாங்கங்கட்கோ செலவு அதிகம். வரவு குறைவு. ஆகையால்தான் கூறுகிறோம், மத்திய அரசாங்கம், ஆரம்பக் கல்விக்கான செலவில் மிகப் பெரும் பகுதியை ஏற்றுக் கொள்வதுதான் முறை. அப்படி ஏற்றுக்கொண்டால்தான் ஆரம்பக் கல்வி விரைவில் பரவும். கல்வியறிவில்லாமையும் சடுதியில் தொலையும் அப்படியில்லாமல், ஆரம்பக்கல்விக்கானமுழுத் தொகையையும் மாகாண ஆட்சிகளே செலவிடவேண்டும் என்று மத்திய அரசாங்கம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தால், இன்னமும் நூறு ஆண்டுகள் சென்றாலும் சரி, கல்லாமை அழியாது. இது உறுதி.

கல்லூரிப் பட்டம் பெற்றவர்களை மட்டுமே இந்தப் புதிய பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்க இருக்கின்றனர் என்று சில சமயங்களில் சிலபல அதிகாரிகளால் செப்பப்படுகிறது. இது உண்மையானால், இந்த ஏற்பாடு முற்றிலும் தவறானது என்பதை நாம் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க ஆசைப்படுகிறோம்.


ஐந்தாவது வகுப்பு வரையில் கல்வி கற்றுத் தருவதற்குப் பட்டதாரிகள் ஏன் தேவை என்பது நமக்குச் சிறிதளவும் புரியவில்லை. செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற யார் வேண்டுமானாலும் ஆசிரியராகலாம் என்று ஏற்பாடு செய்வதே முறை. பட்டதாரிகளும் வரட்டும் ஆசிரியர்களாக— நாம் வேண்டாமென்று கூறவில்லை —ஆனால் பட்டதாரிகள் தான் இருந்தாக வேண்டும் என்று சொல்வது பெருந் தவறு.

1. மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிற பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாக்கப்பட வேண்டும்.

2. மத்திய அரசாங்கத்தின் உதவித்தொகை முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டுமல்ல, குறைந்தது பத்தாண்டுகளுக்காவது கிடைத்தாக வேண்டும்.

3. பட்டதாரிகள்தான் ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்று, தப்பித் தவறிக்கூட, மறதியாகக்கூட இயம்புதல் ஆகாது.

இந்த மூன்று திருத்தங்களும் செய்யப்படுமானால், "1250 பள்ளிகள்" என்கிற திட்டம் நாட்டு மக்களால் நிச்சயம் போற்றப்படும்.




## உலகம் மகிழ்ந்தது!

ஆம்! உண்மையாகத் தான்! உலகம் இந்த மாதம் பெருமகிழ்ச்சியை அடைந்துதான் இருக்கிறது. ஜூலை 21! அந்தநாள், அனைத்துலக அரசியல் தலைவர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் ஐசனோவரிலிருந்து பிரிட்டனின் எண்பது வயதுப்பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் வரையில், சோவியத் ரஷ்யாவின் வெளிநாட்டமைச்சர் தோழர் மாலடோவ் முதல் மென்டஸ் பிரான்ஸ் வரையில் உலக அரசாங்கங்களின் தலைவர்கள் ஒவ்வொருவரும் பெரியதோர் சுமை தங்கள் நெஞ்சை விட்டு விலகியதுபோல எண்ணி இன்பம் அடையத்தான் செய்கின்றனர். சென்ற ஏழரை ஆண்டுகளாக ஓயாமல் நடைபெற்றுவந்த இந்தோ சீனப் போராட்டம் அன்றைய தினம் தான் ஒரு முடிவுக்கு வந்தது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பினரும், இனி போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுவதில்லை என்றும் போர்நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்வது என்றும், ஜூலை 21 அன்று முடிவு செய்தனர். அப்பாடா—ஏழரை ஆண்டுகளுக்குப் பிறகாவது இந்தோ சீனப் போர் ஒரு முடிவுக்கு வந்ததே என்று எண்ணி, உலகம், அன்றைய தினம் மாலை, நீண்டதோர் பெருமூச்சு விட்டது.

இந்தோசீனப் போர் உலகத்தின் ஒரு மூலையில்தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. என்றாலும் ஏழரை ஆண்டுக் காலமல்லவா அந்தப் போர் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது! அதுமட்டுமா? அந்தப் போராட்டத்தால் மனித சமுதாயத்துக்குஏற்பட்ட நஷ்டமும் கொஞ்சமல்லவே! அந்தப் போராட்டத்தின் விளைவாக பிரஞ்சு தரப்பில் மட்டும், ஏறத்தாழ ஒரு இலட்சம்பேர் இறந்து போயிருக்கின்றனர். 114,000 பேர் காயமடைந்திருக்கின்றனர். 28,000 பேர் எதிர்த்தரப்பினரிடம் கைதிகளாகச் சிக்கியிருக்கின்றனர். 3804 கோடி ரூபாய் அளவுள்ள பணம் பாழாகியிருக்கிறது. பிரஞ்சு தரப்பினர் இழந்துள்ள இந்த 3804 கோடி ரூபாயில் 2224 கோடி ரூபாய் பிரஞ்சு நாட்டினால் பிரஞ்சு பொக்கிஷத்தில் செலவிடப்பட்டவை. 1396 கோடி ரூபாய், பிரஞ்சு நாட்டிற்கு உதவிசெய்தவகையில் அமெரிக்க அரசாங்கம் இழந்துள்ளதொகை. மிச்சமுள்ள பணம், கம்போடியா—லாவோஸ்—வியட்நாம் ஆகிய

மூன்று அரசாங்கங்களால் தரப் பட்டவை. இந்தோ சீனப் போராட்டத்தினால் பிரஞ்சு தரப்பிற்கு மட்டும் ஏற்பட்டுள்ள நஷ்டம் இந்த அளவு! ஏறத்தாழ இதே அளவு நஷ்டம் எதிர்த் தரப்பினருக்கும் ஏற்பட்டிருக்கும்! இருவகை நஷ்டங்களையும் கூட்டிப் பார்க்கிறபோது, இந்தோ சீனாவில் நடைபெற்றபோர், மானிட சா்திக்கு ஏற்பட்ட மகத்தானதோர் ஆபத்து என்பதை எவரும் எளிதில் விளங்கிக்கொள்வர்.

## எப்படிப் பிறந்தது?

இந்தப் போராட்டம் எவ்வாறு பிறந்தது? எப்போது தொடக்கபாயிற்று? எத்தகைய சூழ்நிலையில் யாரால் உருவாக்கப்பட்டது? போர், எப்படி எப்படி நடைபெற்றது? போராட்டத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் யாவை? இந்தக் கேள்விகள் எவருடைய உள்ளத்திலேயும் இயற்கையாக எழும்பத்தான் செய்யும்.

இந்தோ-சீனா என்கிற நிலப் பகுதி தென்கிழக்கு ஆசியாவில் அமைந்திருப்பதாகும். வடக்கே சைனாவையும், மேற்கே பர்மா, தாய்லந்து ஆகிய நாடுகளையும், கிழக்கே பசிபிக் மாக்கடலையும், தெற்கே இந்துமாக்கடலையும், தன் எல்லைகளாகக் கொண்டிருப்பது, இந்தோ-சீனா.

இந்தோ சீனா என்கிற நிலப் பகுதி, ஒரு தனி நாடல்ல. கம்போடியா — லாவோஸ்— வியட்நாம் என்கிற மூன்று தனி நாடுகளைக்கொண்ட ஒரு கூட்டாட்சி, இந்தோசீனா. இந்தக் கூட்டாட்சி, பல ஆண்டுகளாக, பிரஞ்சுஏகாதிபத்தியத்தின் இரும்புப்பிடியின்கீழ்ச்சிக்கிக்கிடந்தது. இந்த மூன்று நாட்டினரும் தத்தமக்குத் தனி ஆட்சி தேவை என்பதற்காக விடுதலைப் போர் நடத்திவந்தனர். என்றாலும் பிரான்ஸ், விடுதலை வழங்க மறுத்து, ஏகாதிபத்ய வாதத்தை மீண்டும் மீண்டும் எழுப்பிக் கொண்டிருந்தது. இந்தோசீனாவைச்சேர்ந்த மூன்று நாடுகளுக்கும் பிரான்சுக்குமிடையே உறவு இந்த நிலையில் இருந்தபோது தான், 1939 இறுதியில், உலகப் பெரும் போர் மூண்டிடலாயிற்று.

## பிரான்ஸ் தோற்றது!

உலகப்போர் தொடங்கிய சில மாதங்களுக்கெல்லாம், பிரான்ஸ், பலம்பொருந்திய ஹிட்லரின் துருப்புகளுக்கு இரையாகி, தோல்வி முகாரியைப்பாடி இடுப்பு ஒடிந்து அடங்கி விட்டது. மேற்கே, பிரான்ஸ், ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டுத் தன் வன்மையெலாம் இழந்து ஒடுங்கிக் கிடக்கிறது என்பதை அறிந்ததும், கிழக்கே, ஜப்பான், தானும் தன் வல்லமையை பிரான்சின்மீது செலுத்தத் தொடங்கிற்று. இங்கே இந்தோ சீனப் பகுதி,பிரான்ஸ் ஆதிக்கத்தின்கீழ் வந்ததல்லவா —இந்தப்பகுதிமீது இருந்தது பாய்ந்து ஜப்பானின் போர்வெறி. முதலிலே,ஜப்பான்,

பிரான்சுடன் சமாதானமாகவே பேசி, இந்தோ சீனாவின் வடக்குப் பகுதியைக் 'கபளீகாம்' செய்து விட்டது. நாளாக ஆக, ஜப்பான், சமாதான முறையை விட்டுவிட்டு, போராட்ட முறையைக் கையாண்டு, இந்தோ சீனா முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து விட்டது. அப்போது, பிரான்சால், ஜப்பானை எதிர்த்துப் போராட முடிய வில்லை. எப்படி முடியும்? பிரான்ஸ்தான், அப்போது, தன் தனியாட்சி உரிமையை இழந்து விட்டு, ஹிட்லரின் துருப்புகளால் அடக்கி ஆளப்படுகிற வேதனை மிகுநிலைமையில் வெந்து கிடந்த தேஇங்கிலையில்பிரான்ஸ் ஜப்பானை எப்படி எதிர்க்கமுடியும்? எதிர்ப்பதற்கு எப்படி அனுமதி தரும் ஜெர்மனி? ஜெர்மனியும் ஜப்பானும்தான் அப்போது இணைபிரியாத தோழர்களாக இருந்தனரே!

1945-ம் ஆண்டு மார்ச்திங்கள் 9-ம் நாளுக்குள், இந்தோசீனாவில் உள்ள மூன்று நாடுகளும் ஜப்பானின் பிடிக்குள் சிக்கிவிட்டன. அன்றைய தினம், ஜப்பான் தன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாத தன்மை படைத்த போ-டாய் என்னும் அரசரைத் தலைவராக அமைத்து, தன் கட்டளைக்கு ஏற்ப நடக்கக்கூடிய அரசாங்கம் ஒன்றை இந்தோசீனாவில், நிறுவியது!

### விடுதலைக்கீதம் வீறிட்டெழுந்தது!

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது, நமக்கே உரிமையாம் என்பது உணர்ந்தோம்" என்று, இந்தோ சீனாவைச் சேர்ந்த மூன்று நாடுகளும், ஏற்கனவே விடுதலைப் பண் பாடிவந்தன. அப்போது, பிரான்ஸ், அந்நாடுகளை ஆண்டு வந்தது. இப்போதோ, பிரான்சுக்குப்பதிலாக ஜப்பானின் ஆதிக்கம் அந்நாடுகளின் மீது சுமத்தப் பட்டுவிட்டது. பிரான்சாயிருந்தாலென்ன? ஜப்பானாயிருந்தாலென்ன? இரண்டும் அந்நிய நாடுகள்தானே! பிரான்சின் பிடிக்குள் சிக்கிக் கிடக்க விரும்பாத இந்தோ சீன மக்கள் ஜப்பானின் ஆட்சியை மட்டும் அன்புடன் ஏற்று ஆர்வத்துடன் போற்றியா மகிழ்வர்? வீறுகொண்டெழுந்து விடுதலைக் கிளர்ச்சியைத் தொடுக்கத்தான் செய்வர். மூன்றுநாடுகள் கொண்டதோர் தொகுப்பல்லவா இந்தோசீனா? அம் மூன்று நாடுகளிலும் விடுதலை முழக்கம் வீறிட்டெழுந்தது என்றபோதிலும், லாவோஸ், கம்போடியா ஆகிய இரு நாடுகளைவிட, வியட்நாம்என்னும் நாட்டில்தான் சுதந்தர இயக்கம், ஜப்பானிய அரசாங்கம் அஞ்சி நடுங்கும் வகையில் ஓங்கி உயர்ந்து வலுப்பெற்றுத் திகழலாயிற்று. வியட்நாம் விடுதலைக் கழகம் என்கிற பெயருடன் வியட்நாமின் விடுதலைக்காகப் போராட மாபெரும் இயக்கம் ஒன்றுதொடங்கப்பட்டது. அந்த இயக்கம் பெரும்பாலும், வியட்மின் என்கிற சுருக்கமான பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. உலகயுத்தம் முடிவதற்கு முன்னு

லேயே இந்த வியட்மின் இயக்கம் வலுவடைந்து, வியட்நாம் நாட்டின் பல பகுதிகளை ஜப்பானின் பிடியிலிருந்து விடுவித்துத் தனியரசு செலுத்தும்படி செய்துவிட்டது.

1945ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உலகப்போர் முடிவடைந்தது. அதே ஆண்டில், ஆனால் அடுத்த மாதத்தில், வியட்மின் சுதந்தர இயக்கம் வியட்நாமில் பெரும்பகுதியைக் கைப்பற்றிவிட்டது. ஜப்பானிய ஏகாதிபத்யத்தின் கைப்பாவையாக இருந்து இந்தோசீனாவின் அரசர் என்கிற பட்டப் பெயருடன் அதுவரை வியட்நாமில் கொலுவீற்றிருந்த போ-டாய் என்னும் அரசனையும் வியட்நாமைவிட்டு விரட்டியடித்துவிட்டது வியட்மின் சுதந்தர இயக்கம். அந்த அரசனை விரட்டியடித்ததோடு நிற்காமல், வியட்நாமின் சுதந்தர இயக்கம் வியட்நாம் இனிமுழு சுதந்தர உரிமை பெற்றதனிநாடு என்றும், பிரான்சுக்கோ ஜப்பானுக்கோ அது அடங்கியதல்ல என்றும் பிரகடனம்வெளியிட்டது. இவ்வாறு நிறுவப்பட்ட வியட்மின் சுதந்தர அரசாங்கத்தின் தலைவராக கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த ஹோ-சி-மின் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பிரஞ்சு அரசும் ஹோ-சீ-மின்னும்!

உலக யுத்தம் முடிவடைந்த போது ஜப்பான் தோற்றுப் போயிருந்தது. எனவே ஜப்பானால் அதுவரை கைப்பற்றப்பட்டிருந்த லாவோஸ், கம்போடியா, ஆகிய இரண்டு இந்தோசீன நாடுகளும் பிரஞ்சு ஆதிக்கத்தின்கீழ் மீண்டும் சேர்க்கப்பட்டுவிட்டன. ஆனால் இந்தோசீனத்தைச் சேர்ந்த மற்றொரு நாடாகிய வியட்நாம், ஹோ-சி-மின் என்பவரின் தலைமையில் ஏற்கனவே தனிநாடாகத் தன்னைப்பிரகடனப்படுத்தியிருந்த காரணத்தால், அதனை, பிரான்ஸ் உடனடியாகத் தன்னோடு இணைத்துக் கொள்ளமுடியவில்லை.

அப்போதுதான், பிரான்ஸ், ஜெர்மனியின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்தர வாழ்வைப் பெற்றிருந்தது. இந்நிலையில், பிரான்சால், எப்படி வியட்நாமுடன் போராடமுடியும்? எனவே, பிரான்ஸ், ஹோ-சி-மின்னுடன் ஓர் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டது. இந்த உடன்படிக்கையின்படி, வியட்நாம், ஒரு சுதந்தரத் தனியரசு என்பதை பிரான்ஸ் ஒப்புக்கொண்டது. அது போலவே, வியட்நாம் ஒரு தனியரசுதான் என்றாலும், அது, பிரஞ்சு யூனியனுக்குள் இருக்கிற இந்தோசீனக் கூட்டாட்சியைச் சேர்ந்த ஒரு தனியரசு என்கிற நிலையை ஹோ-சி-மின் அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இந்தக் காரணத்தால், வியட்நாமுக்குள், பிரஞ்சுத் துருப்புகள் சில காலம் இருக்கலாம் என்கிற நிலையும் ஏற்பட்டது.

இரு சாராருமே சரி, இந்த உடன்படிக்கையை எழுத்துக்கு எழுத்து நிறைவேற்றி இருந்தால், இந்தோ சீனப் போராட்டம் ஏற்பட்டே இருக்காது. ஆனால், உடன்படிக்கையை, இரண்டு தரப்பினருமே அரை மனதுடன்தான் ஒப்புக்கொண்டனர். மிக விரைவிலேயே உடன்படிக்கையை இரு தரப்பினரும் மீறிடலாயினர்.

பிரஞ்சு யூனியனுக்குள் இருக்கும் தனியரசு என்கிற நிலை முழுத் திருப்தி அளிக்கவில்லை ஹோ-சி-மின்னுக்கு. அவர் முழு விடுதலை தேவை என்று வீர முழக்கம் எழுப்பலானார். இதனைக் கண்டதும், பிரான்ஸ், இனி, ஹோ சி-மின்னை நம்புவதில் பயனில்லை என்றெண்ணி, வியட்நாமின் தென்பகுதியில் தங்கள் சொற்படி நடக்கக்கூடிய, வேறோர் அரசாங்கத்தை நிறுவலாயிற்று.

## போராட்டம் தொடங்கிற்று!

போட்டி அரசாங்க நிறுவனம்' உடன்படிக்கைக்கு மாறுபாடானது என்று இயம்பிவிட்டு, ஹோ-சி-மின் புது அரசாங்கத்தின் மீதும், அதனை அமைத்து நடத்திவந்த பிரான்சின் படைகள் மீதும் போர் தொடங்கலானார். இவ்வாறாக இந்தோ சீனப் போராட்டம், 1946-ம் ஆண்டு டிசம்பர் மாதம், தொடக்கமாயிற்று.

போர் தொடங்கிய வேளையில் வியட்நாமின் பெரும் பகுதி, ஹோ-சி-மின் தலைமையிலுள்ள கம்யூனிஸ்ட் அரசாங்கத்திடமும், சிறுபகுதி, பிரஞ்சு அரசாங்கத்திடமும் இருந்துவந்தன. போர் தொடக்கமானதும், ஹோசிமின் மலைப்பகுதிகளுள் மறைந்து கொண்டார். திடீரென்று தோன்றி எதிர்பாரா இடத்தில் தாக்கிவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்துவிடுகிற கொரில்லாப் போர்முறையைக் கையாளலானார் ஹோ-சி-மின். சில சமயம் பிரஞ்சுத் துருப்புகள் தோற்கும். சில நேரங்களில் வியட்மின் படைகள் பின்வாங்கும் என்றாலும் இரு சாராரில் யாரும் யாரையும் முழுமையாகத் தோற்கடிக்க இயலவில்லை. 1946-ம் ஆண்டு டிசம்பர் முதல் 1949-ம் ஆண்டு டிசம்பர் வரையில் போர் இந்த வகையாகவே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஆனால் 1949 டிசம்பர் மாதத்தில் அரசியல் உலக அரங்கில் மிகப் பெரியதோர் மாறுதல் ஏற்பட்டது. அந்த மாறுதல் வியட்நாமில் நடைபெற்றுவந்த போராட்டத்தின் அடிப்படையையும் அடியோடு மாற்றியமைத்து விட்டது 1949 டிசம்பர் திங்களில், சியாங்-கே-ஷேக்கின் ஆட்சி சுக்குநூறாக்கப்பட்டு, சீனாவில், மா-சே-துங்கின் தலைமையில் புதிய ஆட்சி உருவாக்கப்பட்டதே அந்த மகத்தான நிகழ்ச்சியைத்தான் இங்கே நாம் குறிப்பிடுகிறோம். சீனாவில் உருவாகிய புதிய ஆட்சி, தனக்கு அருகே இருக்கிற வியட்நாம் நாட்டில், பிரஞ்சு அரசாங்கம்

இருப்பதைவிட, தன்னுடன் கொள்கையில் ஒத்துப்போகிற ஹோ-சி-மின்னின் அரசாங்கம் இருப்பதுதான் தனக்கு நல்லது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டது. எனவே, புதியசீனு, ஏராளமான தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும் ஏனைய உதவிகளையும் ஹோ-சி-மின்னுக்கு மறைமுகமாகத் தந்துதவலாயிற்று.

## புதிய சீனு உதவிற்று!

புதிய சீனுவின் மறைமுகமுக உதவி, ஹோ-சி-மின்னின் கரங்களைப் பலமடங்கு வலுவடையச் செய்தது. இழந்த பல பகுதிகளை மடமடவென்று கைப்பற்றத் தொடங்கியது ஹோ-சி-மின்னின் வியட்நாம் பட்டாளம்.

1950, 51, 52, 53ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்கள் —இதே நிலை நீடித்தது. வியட்நாம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து விடவேண்டுமென்று ஹோ-சி-மின்னின் அரசாங்கமும் முயன்று பார்த்தது. ஆனால் இந்தக் கால அளவு முழுவதிலும், போராட்டம், வியட்நாம் நாட்டின் எல்லை அளவோடு இருந்துவிட்டது. ஏனைய இரு இந்தோசீன நாடுகளாகிய லாவோஸ், கம்போடியா, ஆகியவற்றுள் நுழையவில்லை. ஆனால் சென்ற ஆண்டில், அக்டோபர் மாதம், திடீரென்று, ஹோ-சி-மின்னின் துருப்புகள், லாவோஸ் கம்போடியா ஆகிய இருநாடுகளுக்குள்ளும் நுழையலாயிற்று.

இந்த ஆண்டில், பிப்ரவரி திங்களில், லாவோஸ் நாட்டின் தலைநகரமாகிய லாங் பிரபாங்கின்மீது ஹோவின் துருப்புகள் பெரிய தோர் படையெடுப்பை நிகழ்த்தின. மறு மாதம், லாவோசில் உள்ள "டியன் பியன்பூ" என்னும் முக்கியமான கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டது ஹோவின் பட்டாளம்.

மே 6-ம்நாள் வரை அந்த கோட்டைக்கான அரும்போர் தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் மறுநாள் பிரஞ்சுத் துருப்புகள் தோல்வியடைந்தன. டியன் பியன் பூ, வியட்மின் துருப்புகளின் வசமாயிற்று.

## ஜெனிவாவில் மாநாடு!

இனியும் இந்தோ சீனப்போர் தொடர்ந்து நடைபெறுமானல் அது உலகப் பெரும் போராக மாறிடக்கூடும் என்கிற அச்சம் இந்நிலையில் உலக வல்லரசுகளுக்கு ஏற்படலாயிற்று. அந்த அச்சமும், அதனை அகற்றுவதற்கான முயற்சியும், ஜெனிவாவில், சமாதான மாநாடாக உருவெடுத்தன.

இந்தோ சீனப் போராட்டத்தை எப்படி நிறுத்துவது என்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் அங்கே நடைபெறலாயின. சமாதான மாநாட்டில், பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனு, வியட்மின், பிரஞ்சு சார்

புள்ள வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய ஒன்பது நாடுகளின் அரசாங்கங்கள் பங்கெடுத்துக்கொண்டன.

மே 6ஆம் தேதியன்று மாநாடு தொடக்கமாயிற்று. 20-ம் நாளன்று. பிரான்சிற்கு, மென்டிஸ் பிரான்ஸ் என்பவர் புதிய முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியேற்றதும் புதிய முதல்வர், ஒரே மாதத்தில் இந்தோசீனப் பிரச்சினைக்கு முடிவு காண்பேன்—இல்லையேல் என் பதவியை வீசி எறிவேன் என்கிற சூளுரையை உலகுக்கு அளித்தார்.

உலக வரலாற்றிலே மிக மிக வியப்புக்குரியதோர் நிகழ்ச்சி—அவருடைய சூளுரை பலித்தது—இந்தோசீனப் போர் ஒரே மாதத்தில் நின்றது — ஜூலை 21ல் சமாதான ஒளி இந்தோசீன மண்ணில் வீசியது.

ஜூலை 21—ல்கையெழுத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையில் முக்கிய பகுதிகள் பின்வருபவை:

1. கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளுக்கும் பிரான்ஸ், முழு விடுதலையை அளிக்கிறது.

2. கம்போடியா, லாவோஸ் இரு நாடுகளும், 1955ல், நாடெங்கும் பொதுத் தேர்தல் நடத்தி, அந்தத் தேர்தலின்படி வெற்றிபெறுகிற கட்சியின் மூலம், ஜனநாயக முறையில் தங்கள் அரசாங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

3. வியட்நாம் நாட்டைப் பொறுத்தவரை, 1956 ஜூலை மாதம், நாடெங்கும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு அதன் மூலம் சுதந்தர அரசாங்கம் அமைக்கப்படவேண்டும். அதுவரை, இப்போது உள்ளபடியே வியட்நாமின் ஒருபகுதி, வியட்மின் அரசாங்கத்திடமும் மற்றப் பகுதி மற்ற அரசாங்கத்திடமும் தொடர்ந்து இருக்கும்.

4. மேற்படி தேர்தல், கனடா—இந்தியா—போலந்து ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவேண்டும்.

இது, உடன்படிக்கை.

இதன்படி, போர், நின்றுவிட்டது ஜூலை 21 முதல்.

உலகம் மகிழ்கிறது. மகிழ்வது இயற்கைதானே! உலகப் பெரும்போராக மூண்டிருக்கக் கூடிய ஒரு பேராபத்து ஜெனிவா மாநாட்டின் மூலம் ஒழிக்கப்பட்டிருக்கிறது என்றால், அது மகிழ்ச்சிக்குரிய செய்திதானே!

போர்கள் மடியட்டும்! அமைதி பிறக்கட்டும்! என்று நாமும் இயம்பி மகிழ்வோம்.

# அய்யோ பாவம்!

## (இராதாமணாளன்)

"அட பாவி!" என்று அலறினேன். என் கதறல் அந்தப் பையனின் காதில் ஏறவா போகிறது? அழுதால் மட்டும், "அய்யோ பாவம்!" என்று எண்ணி என்னை விட்டுவிடுவானா என்ன? என்முதுகில்திரும்பவும்கோலால் ஒரு அடி கொடுத்தான்! என் நிலைமை எப்படி யிருக்கும்? வலியையும், வந்த கோபத்தையும் பொறுக்கவும் அடக்கவும் முடியாமல், காலால் எட்டி உதை கொடுத்தேன்!

என் கெட்ட காலமோ, அல்லது அந்தப் பையனின் நல்ல காலமோ எனக்குத் தெரியாது—அந்த உதை அவன்மேல் படவே இல்லை! உதைத்த உதைதான் நம்மேல் படவில்லையே என்று அவன் சும்மா இருந்தானா? எப்படி யிருப்பான்? கோலால் என் கால்களை, கோபம் தணியும் மட்டும் அடியடி யென்றும் அடித்தான்! ஓடலாமா என்று கூட எண்ணினேன்! அதெப்படி முடியும்? நடக்கவும், ஓடவும் காலில் பலமிருந்தால், அவன் ஏன் என்னை அடிக்கப் போகிறான்? அடிப்பது இருக்கட்டும், அப்பா அருகிலாவதுவரதைரியமிருந்திருக்குமா? அவன் கிடக்கிறான், சின்னப்பையன், அவன் அப்பொழுதெல்லாம் என் பக்கத்தில் வரவே நடுநடுங்குவான்! உம்! அது ஒரு காலம்! இந்தக் கிழவயதில் அதையெல்லாம் எண்ணினால் என்ன பயன்?

எண்ணிப் பார்க்காதே—பிறகு மனம் நோகாதே—தாள முடியாமல் கண்ணீர் விடாதே—எத்தனை முறை சொன்னாலும் இந்தப் பாழாய்ப் போன மனம் கேட்கிறதா? அந்தக் காலத்தில்—என் காளைப்பருவத்தில்—நடந்ததையெல்லாம் நினைத்தாலே... ...அப்பப்பா......என் உணர்ச்சிகளை எப்படி வெளியிடுவதென்றே தெரியவில்லை!

இப்பொழுது என்னைப் பார்ப்பவர்கள், காலனுக்கூட தாளாதவன், போடும் தீனியே தண்டம், அப்படி இப்படி யென்றும் ஏதேதோ கேவலமாகவும் என் எதிரிலேயே பேசுகிறார்கள் அல்லவா? இதே ஆட்கள் தான் காளைப் பருவத்தில் என்னைக் கண்டு சொக்கி நின்றவர்கள்!

"வாட்ட சாட்டமா வளர்ந்து விட்டானே நம்ப **வெள்ளை**!" என்று யாராவது தப்பித் தவறி மனதில் தோன்றுவதை வெளியில் சொல்லிவிட்டால் போதும், அன்று அந்திவேளையில் 'திருஷ்டி' சுற்றிப் போடும்படி எஜமானர் உத்திரவு போடுவார்!

என்போன்ற மற்ற வேலைக்காரர்களைவிட, என் மீதுதான்

எஜமானருக்கு ஆசை அதிகம்! பெருமைக்காக இதை நான் சொல்லவில்லை, அவரே அதை அடிக்கடி சொல்லுவார்!

"வள்ளி! உன்னைப் பார்த்தால் தாண்டி நம் வெள்ளை அடங்கி விடுகிறான்! என்னைக் கண்டால் முறைக்கிறான், உன்னைப் பார்த்தால் பல்லைக் காட்டுகிறான்!" இப்படி எத்தனையோ முறைகள் என் எஜமானர் சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன்! அவர் கூறியதும் உண்மைதான். பயந்து கொண்டே என் அருகில் வரும் அவரைக் கண்டால், கேலியும் கர்வமும் கலந்த ஒரு முரட்டுப் பார்வையைத்தான் அவர் மீது நான் வீசுவது வழக்கம்! எஜமானி அம்மாள் சிரித்த முகத்தோடு, "வெள்ளை!" என்று இனிமையான குரலிலே அன்போடு அழைத்துக் கொண்டே வரும் போது, நான் சாந்த சொரூபி ஆகிவிடுவேன்! அந்த அம்மா அருகில் வந்து ஆசையோடு முதுகில் தட்டிக் கொடுக்கும் போது, எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் தெரியுமா? சிற்சில நாட்களில் எஜமானி அம்மாள், சிரித்துக்கொண்டே என் கழுத்தைத் தடவிக் கொடுப்பாள்! இதையெல்லாம் பார்க்கும் என் தோழர்களுக்கு என்மீது சிறிது பொறாமைதான்! இருக்காதா?

என்னைப் பற்றியும், என் 'ஜாதி'யைப் பற்றியும் உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவை இல்லை! ஏன், உங்களுக்குத் தெரியாதா என்ன? எங்கள் உறவு முறை, நட்பு, காதல், வாழ்வு இவற்றை எல்லாம் விளக்கினால், அவற்றில் பெருமையும் சிறுமையும் பின்னிக் கிடக்கும்!

ஒருநாள் என் எஜமானரின் மகன், "அப்பா!" என்று தன் தந்தையை அழைத்தான்! உடனே எனக்குப் பலநாட்களாகத் தோன்றாத ஒரு அபூர்வமான எண்ணம் தோன்றியது! யோசனை செய்தேன்! ஆமாம், கண்டு பிடித்து விட்டேன்.

"இந்தப் பையனுக்கு ஒரு தந்தை எப்பொழுது இருக்கிறாரோ, அப்பொழுது எனக்கும் ஒரு தந்தை நிச்சயமாக இருந்துதான் ஆகவேண்டும்!"—இது தான் அன்று நான் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த புதிய உண்மை! உடனே, தோட்டத்திலிருந்த என் அம்மாவை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் ஓடினேன்!

"அம்மா!"

"என்னடா கண்ணு!"

"நானொன்று கேட்கப்போறேனம்மா, உண்மையைச் சொல்லணும்!"

"கேளுடா என் செல்வமே!"

"என் அப்பா யார் அம்மா? இப்போ எங்கே இருக்கிறார்?"

அம்மா வானத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, என் அருகே வந்ததும், "என்னம்மா,

நான் கேட்பதற்குப் பதில் சொல்லாமலே சிரிக்கிறீங்கோ?'' என்று படபடப்போடு வினவினேன்.

"நான் இருக்கும் போது, உன் அப்பாவைப் பற்றி நீ ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?''

"ஆமாம், தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்! சொல்கிறீர்களா இல்லையா?''

"கோடி வீட்டில் இருக்கிறானே அவனோ, அல்லது பக்கத்து வீட்டில் இருக்கிறானே அவனோ, எனக்குச் சரியா கவனமில்லடா கண்ணு உன் அப்பா!''

என் அம்மாவின் பதிலைக் கேட்டு நான் திடுக்கிடவுமில்லை, அவளைத் திட்டவுமில்லை! மாறாகப் பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்! இவன்தான் உன் தந்தை என்று திட்டவட்டமாக என் அம்மாவால்சொல்லமுடியவில்லை! ஆனால் எனக்கு ஒரு தந்தை இருந்தான் என்பதை, அவள் சந்தேகமில்லாமல் ஒத்துக் கொண்டாள்! "எனக்கும் ஒரு தந்தை நிச்சயமாக இருந்துதான் ஆகவேண்டும்!'' என்று என் சொந்த ஆராய்ச்சியின் மூலம் நான் கண்டு பிடித்தது, உண்மையாகி விட்டதே என்பதை எண்ண எண்ண, உள்ளத்தில் பொங்கி வழிந்த களிப்பு இவ்வளவு அவ்வளவுஎன்று, சொல்ல முடியாது!

வாலிபப் பருவத்தில் வெளியில் நான் புறப்படுகிறேன் என்றால், மற்றக் காளைகளுக்குக் கிலிதான்! கட்டிளம் பெண்களுக்கோ சொல்லமுடியாத ஆனந்தம்! எங்கள் ஜாதிப் பெண்கள் பகலில் தோப்பிலும், வயல் வெளியிலும் சுற்றிக் கொண்டிருப்பார்கள். இரவானால் வீட்டில் அடைபட்டுக் கிடைப்பார்கள்!

ஒரு பெண் முற்றி விட்ட காதல் பார்வையை என்மீது வீசுவாள். ஒருத்தி அருகே ஓடிவருவாள். அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, மற்றொருத்தி என் மீது வந்து உராய்வாள். வேறொருத்தி மான் போல் துள்ளுவாள். இன்னொருத்தி அன்ன நடை நடந்து காட்டுவாள். பிறிதொருத்தி என் பின்னால் ஓடி வருவாள். ..........பஞ்சமேது அந்தப் பருவத்தில்! இந்தக் கிழ வயதில் அதையெல்லாம் எண்ணினால், மனம் ஒரு விதமாக இருக்கிறது! அந்தக் காலம் திரும்பவும் வராதே, என்பது கவனத்திற்கு வரும்போதுதான், கவலை மிஞ்சுகிறது—துக்கம் நெஞ்சை அடைக்கிறது!

காதல் உலகில் இப்படிச் சதா காலமும் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கும் போது, ஒரு நாள், என் எஜமானர் என்னை வேலைக்குப் பழக்கப் படுத்த ஆரம்பித்தார். அப்பொழுது நான் செய்த அமர்க்களமும் அட்டகாசமும் சொல்லமுடியாது. வாலிபன் ஒருவனை, அவனது பழக்க வழக்கங்களிலிருந்து வளைந்து கொடுக்கும் படிச் செய்வது, அவ்வளவு

சுலபமான காரியமா என்ன? அடியும் உதையும் விழ விழ, அடங்கி ஒடுங்கி வேலை செய்யப் பழகிக் கொண்டேன்!

வேலைக்கு நான் தயாரானதும், வேறு எவருக்கும் இல்லாத மதிப்பு, எனக்கு ஏற்பட்டது. வேளா வேளைக்குச் சரியான உணவு, காலையிலும் மாலையிலும் குளித்தல், படுப்பதற்கு வசதியான இடம்—இப்படி இராஜ போகத்தில் நான் இருந்தேன். இருந்தேன் என்றால், இந்த வசதிகளை எல்லாம் நானே செய்து கொண்டேன், என்று எண்ணி விடாதீர்கள்! என்னால் எப்படிச் செய்து கொள்ள முடியும்? இவற்றையெல்லாம் என் எஜமானர் செய்து கொடுத்தார்! இந்தக் கிழமான காலத்தில்தான், இந்த நன்றி கெட்டவர்களின் உள்ளக் கருத்துப் புலப்படுகிறது. அப்பொழுதுதெரிந்திருந்தால், ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைத்து, இப்படி எலும்பும் தோலுமாகி விட்டிருப்பேனா?

ஒரு சமயம் தவறி நான் கிணற்றில் விழுந்து விட்டேன். அப்பொழுது என் எஜமானர் துடி துடித்ததையும், ஊரார் விழுந்து அடித்துக்கொண்டு ஓடி வந்து என்னைத் தூக்கியதையும், அப்பொழுது எண்ணி யெண்ணிப் பூரிப்பும் பெருமிதமும் கொள்வது வழக்கம். ஓர் ஆண்டு, ஊரில் ஒரு வித விஷநோய்வந்து விட்டது. அந்த நோய் எனக்கும் வரக்கூடாதே என்ற வேதனையினால், எஜமானர் என்னென்ன செய்தார், தெரியுமா? கடைசியில் அந்த நோய் எனக்கு வந்து விட்டதை அறிந்த அவர், அழுதே விட்டார் என்றால், வேறு எப்படி நான் அவர் வேதனையை விளக்கமுடியும்? ஏதேதோ கடவுள்களுக்கெல்லாம் பிரார்த்தனை செய்துகொண்டார், என் நோய் குணமாக வேண்டுமென்று! நோயினால் நான் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கும்போது, எனக்காக அவர் அலைந்த அலைச்சலையும், காட்டிய அக்கறையையும் நினைத்துத் தற்பெருமை கொள்வேன்! நோய் சுகமானதும் என்னைப் போன்ற ஓர் உருவம் மண்ணில் செய்து, எட்டியம்மன் கோயிலில் வைக்கப்பட்டது! அந்தக்கோயில் வழியாகச் செல்லும்போது, அந்த உருவம் என் கண்ணில் படும். அந்த நேரங்களில், என் எஜமானரின் அன்பு உருவம் மனக்கண்முன் வந்து நின்று நர்த்தனம் செய்யும்! இப்பொழுதுதானே தெரிகிறது, அந்த நன்றி கெட்டவர் எதற்காக அதையெல்லாம் செய்தார் என்று!

அப்பொழுது அவர் குடும்பத்திற்காக நான் உழைத்த உழைப்பையும், சிந்திய இரத்தத்தையும், கொஞ்சமாவது இப்பொழுது எண்ணிப் பார்க்கிறாரா? நன்றி என்பது நண்டு கண் அளவாவது இருக்க வேண்டாமா? முன்போல் எனக்கு இப்பொழுது சாப்பாடு தருகிறார்களா? இல்லையே! ஏதோ உதிர்ந்து போனதையும்

உலர்ந்து போனதையும் போடுகிறார்கள்! அதற்காகவா நான் வருந்துகிறேன்? இல்லையே! அதற்கு மேல் போட்டாலும் எனக்கு ஜீரணமாகாதே! ஆகாரம் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும், அன்பு சிறிதளவாவது காட்டக் கூடாதா? அன்பு காட்டா விட்டால் போகிறது, இந்தத் தள்ளாத வயதில் அடித்தும் உதைத்தும் சித்திரவதை செய்யாமல் இருந்தால் போதுமே! இந்த நன்றி கெட்டவர்களின் நோக்கம், இன்னும் ஏன் ஜாதியாருக்குத் தெரியாமல் இருக்கிறதே என்பதை எண்ணும்போது, என் துக்கம் அதிகமாகிறது.

"வெள்ளை! வெள்ளை!" என்று அப்பொழுது என்னைப் போற்றிப் புகழ்ந்தவர்கள், இப்பொழுது "சிகப்பா! சிகப்பா!" என்று வேறொருவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். என் கதி தான் அவனுக்கும் என்ற உண்மை, அந்தத் தடியனுக்கு எங்கிருந்து தெரியப் போகிறது! "சொல்லலாமா?" என்று பார்த்தாலும், அவனிருக்கும் சுகபோக வாழ்விலே, என் சொல்லையா நம்புவான்?

என் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சிய எஜமானி அம்மா, இப்பொழுது அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு குலாவுகிறாள்! என்னிடம் விளையாடும்போது, அந்த அம்மாளுக்குச் சின்ன வயது! அப்படிப் பட்ட வயதிலே யாரிடம் கொஞ்சினாலும், சந்தோஷமாகத்தான் இருக்கும்! இப்பொழுது கிழவியாகி விட்டு வந்து கொஞ்சுகிறாள்—அதைப் பார்த்து அந்தச் சிகப்பன் பூரிக்கிறானே! அவனை என்னவென்று சொல்வது? கிழவியாய் இருந்தாலும், எஜமானி அம்மா ஆயிற்றே என்ற எண்ணமா அவனுக்கு? பாழாய்ப்போன கிழ வயதில், என்னால் சரியாகக்கூட யோசனை செய்ய முடியவில்லை!

அந்த அம்மா வரும்போது, ஆவலோடு பார்ப்பேன். அவள் என்னை அலட்சியத்தோடும் அருவருப்போடும் பார்த்து விட்டு, "இந்தக் கிழட்டுச் சனியனுக்கு, ஏன் இன்னும் தண்டத் தீனி போட்டு, வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று வெறுப்போடு கூறுவாள். அந்த அம்மாளுக்கு இன்னும் தான் குமரியாக இருப்பதாக எண்ணமா? அவள் முகத்தையும் தலையையும் பார்த்தாலே தெரியுமே, அவள் கிழவியாகிவிட்டாள் என்று. கிழவியாகி விட்டும், அவள் மட்டும் ஏன் சாப்பிடுகிறாள்? என்ன இருந்தாலும் அவள் எஜமானி—நான் வேலைக்காரன் தானே?

அந்தப் பையனைப் பார்த்து உதைத்தாலும் உதைத்தேன்—உதை அவன் மேல் படாவிட்டாலும்—அவன் என் காலின் மீது அடித்த அடி, உயிரையே இப்பொழுது துடி துடிக்கச் செய்கிறதே! இன்றைக்கெல்லாம் இந்த மாத்தடியை விட்டு, அப்படி இப்படி நகர முடியாது

போலத் தோன்றுகிறதே! பசியோ காதை அடைக்கிறது! காய்ந்ததையாவது கொஞ்சம் கொண்டு வந்து போடுவார்களா? நன்றி கெட்டவர்களாயிற்றே, நான் பசியால் எப்படிப் பதை பதைத்தால் அவர்களுக்கு என்ன?

"டேய்! கைலாசம்!" என்று என் எஜமானர், அந்தப் பையனை அழைக்கும் குரல் கேட்கிறதே! ஆமாம், இதோ வருகிறார், அந்த நன்றி கெட்டவர்! அவருடன் வருகிறானே, அவன் யார் புதியவனாக இருக்கிறானே? இதோ, அந்தப் பையனும் எங்கோ இருந்து ஓடி வருகிறான்!

"அந்தக் கிழட்டு மாடு எங்கேடா?"

"புளிய மரத்தடியிலே படுத்திருக்கு!"

"கைலாசம், அந்தச் சனியனை இவருக்கு விற்று விட்டேன்—இருபது ரூபாய்க்கு!"

இப்படி அந்தப் பையனும் என் எஜமானும் தனியாக—புதியதாக வந்தவனுக்குக் கேட்காதபடி—பேசிக்கொண்டது நன்றாக எனக்குக் கேட்டது! என் உள்ளம் நடு நடுங்கியது, உடல் சிலு சிலுத்தது!

இருபது ரூபாய்—அட பாவி—நன்றி கெட்டவனே—இருபது ரூபாயா உனக்குப் பெரியதாகத் தோன்றுகிறது? நான் எவ்வளவு உழைத்தேன்? உனக்கு எவ்வளவு சொத்து சேர்த்துக் கொடுத்தேன்? மாடாகிய எனக்குள்ள நன்றியும் விசுவாசமும் கூட, மனிதனாகிய உனக்கு இல்லையே! அட மிருகமே! புலியுள்ளம் கொண்ட கொடியவனே! இருபது ரூபாய்—உன் குடும்பம் வளமடையுமா?—நீ வாழ்வாயா?

"இது தானப்பா, நான் சொன்ன மாடு!" என்று எஜமானர், புதியதாக வந்தவனிடம் என்னைச் சுட்டிக் காட்டினார்.

வந்தவன் என்னைத் தட்டி எழுப்பினான். என்னால் எப்படி எழுந்திருக்க முடியும்?

"ஏங்கோ! செக்குக்குக்கூட இந்த மாடு பிரயோசனப் படாதுங்களே!"

"நல்ல மாடு அப்பா இது! தீனி சரியா இல்லாமே இப்படி இருக்கு! புண்ணாக்கும் தவிடும் வைத்தா, ஒரு மாசத்திலே சரியாய் போயிடும்!"

"பத்து ரூபாய்க்கு மேலே இது தாளாதுங்கோ — அதுகூடத் தோல்விலை தானுங்கோ!"

என் மனம் எப்படியிருக்கும்? "அட பாவி! நீங்கள் நாசமாய்ப் போய் விடுவீர்கள்!" என்று கத்தலாமா என்று கூட எண்ணினேன். கத்தினால் அவர்களுக்குப் புரியவா போகிறது? நான் உயிரோடு இருக்கும் போதே, என் தோலுக்கு விலை பேசி, விற்கப் படுகிறதே! இதென்ன அக்கிரமம்? அய்யோ, வேதனையை என்னால் தாள முடியவில்லையே!

(28-ம் பக்கம் பார்க்க)

# சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் 11-7-54-இல்

# டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார்

## ஆற்றிய வரவேற்புரை

தமிழ்ப் பெரு மக்களே, தமிழாசிரிய நண்பர்களே, கல்வி அமைச்சர் அவர்களே, தலைமை தாங்க வந்திருக்கும் பேராசிரியர் அவர்களே, உங்கள் அனைவிருக்கும் என் அன்பும் வணக்கமும் உரிய ஆகுக. இந்த இரண்டாவது மாநிலத் தமிழ் ஆசிரியர் மாநாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்புக் குழுவின் சார்பில் வரவேற்கின்றேன். இம்மாநாடு இவ்விடத்தில் நடத்தப் பெறவேண்டும் என்று சென்னை மாவட்டத் தமிழாசிரியர் கழக வேண்டுகோளையொட்டி இங்கு இதனைக் கூட்டியுள்ளோம். இந்த மாநாடு தில்லையின் எல்லையிலே நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையது ஒன்று. தமிழிலே பெரு விருப்பமுள்ள தில்லைக் கந்தன் அண்மையில் நடமாடுவது அன்றியும், இங்கே ஒரு கலைக்கோயிலைச் செட்டிநாட்டு அரசர் சர். மு. அண்ணாமலைச் செட்டியார் எழுப்பி இருக்கின்ற காரணத்தாலும், தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் அளிக்கின்ற பல்கலைக் கழகமாக இது அமைந்திருக்கிற காரணத்தாலும், தமிழாசிரியர்கள் அனைவரும் ஏனைய ஆசிரியர்களுக்கு ஒப்பாக மதிக்கப்படுகின்ற பெருமையுடைய பல்கலைக் கழகமாக இது இருக்கின்ற காரணத்தாலும், இவண் இம்மாநாடு கூட்டப்படுவது மிகப் பொருத்தமானதே. தமிழினிடத்திலே மிக்க பற்றும் அன்பும் உடைய கல்வி அமைச்சர் அவர்கள் இம்மாநாட்டினைத் திறக்க இசைந்திருப்பது பொருட்டு அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அண்மையில், கலைக்களஞ்சிய முதல் சம்புடத்தை வெளியிட்டபொழுது மாண்புறு கல்வி அமைச்சர் ஆற்றிய விரிவுரையில், தமிழ் மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் யாங்கும் கற்பிக்க வேண்டும் என்று துணிவுடன் கூறினார். பக்கத்தில் இருந்த நேயர்களை நோக்கி, "நீங்கள் தமிழிலே முடியுமா" என்று கேட்டால், நான் "ஹிந்தியிலே முடியுமா" என்று கேட்பேன் என்று அறைகூவினார். அதிலிருந்து அவருடைய தமிழ்ப் பற்றும் தமிழ் ஆர்வமும் அறியப்படும். அவர்கள் இம்மாநாட்டுத் திறப்பாளராக அமைவது இக்காரணத்தா

னும், கல்வி அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலும் மிகவும் பொருத்தமானதே.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலேயே ஐந்து ஆண்டுகள் தமிழ்ப் புலமைத் தலைமை நடாத்திப் பெருந் தொண்டாற்றித் தமிழ் மொழிக்கென வாழ்ந்து வருபவர். இன்றும், வயது முதிர்ந்தவராயினும், தமிழே உயிர்ப் பொருள் என வாழ்ந்து வருகின்ற அவர்கள் அத்தமிழ் மொழிக்காக அருந் தொண்டாற்றி வருவது போற்றத்தக்கது ஒன்றும். அவர்கள் இன்று இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற்கு இசைந்ததற்காக அவர்களுக்கும் நன்றி சொல்லி அவர்களை வரவேற்கிறேன். அன்றியும், இந்த மாநாட்டிலே பங்கு பெறுவதற்காக எங்கள் அழைப்பிற்கு இணங்கி வந்திருக்கின்ற ஆசிரியர்கள் பலருக்கும் "நுங்கள் வரவு நல்வரவாகுக" என மொழிகின்றேன். எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்குக் கூடியிருக்கின்ற அனைவரையும் வரவேற்கும் பொறுப்பு என்னுடையது ஆகின்றது.

இம் மாநாட்டிலே சிறப்பாகத் தமிழாசிரியர்களுடைய நிலையையும் ஊதியத்தையும் உயர்த்துவதற்கு வழி காணவேண்டும் என்பது பல மாவட்டக் கழகங்களின் செயற்குழுக்களுடைய விருப்பம். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலே பணியாற்றுகின்ற தமிழாசிரியர்கள் ஏனைய பிற ஆசிரியர்களின் நிலை அளவாவது உயர்த்தப்பட வேண்டும் என்பது அவர்களுடைய விழைவு. ஏனைய பொருள்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் வகுப்பு ஆசிரியர்களாகவும் தேர்வு மேற்பார்வையாளர்களாகவும் அமைதல் போலத் தமிழாசிரியர்களும் அமைய இடம் செய்து தருதல் வேண்டும் என்ற அவர்களுடைய வேண்டுகோள். அரசியல் அதிகாரிகளாலும், பள்ளிக்கூட நிர்வாகிகளாலும் கவனித்துச் செயலாற்றப்படும் தரத்ததாகும். தமிழ் மொழியினைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தங்கள் பொருளிற் பிறரை ஒத்த சிறந்த தகுதி பெற்றிருக்கிறார்கள் ஆனதினாலே, பயிற்சி பெற்ற வித்துவான்களும் புலவர்களும் பி. ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பெறும் ஊதியம் பெறுமாறு செய்யவேண்டும் என விடுதலை இந்தியாவில் எதிர்பார்ப்பது பொருத்தமானதே. அவ்வண்ணம், அவர்களுடைய நிலையையும் சம்பளத்தையும் உயர்த்துவதற்குக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் சில நிறைவேற்றப்படவிருக்கின்றன.

இம்மாநாடு தமிழாசிரியர்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்கு மாத்திரம் கூட்டப்படுவது ஒன்று அன்று. சென்னை மாநிலத்திலேயுள்ள தமிழாசிரியர்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கூடி அளவளாவுவதற்கும், தமிழைப் பற்றியும் தமிழாசிரியர்

களைப்பற்றியும் தங்கள் தங்கள் கருத்துக்களை உரையாடிக்கொள்ளும் பொருட்டும் இம்மாநாடு பெரிதும் உதவும் என்பது நம்பிக்கை.

தமிழாசிரியர்கள் திருக்குறளை நன்ருகக் கற்று ஓதிப் பயிற்றுவித்து வருகிருர்கள். ஆனதினுலே அவர்கள் கடவுள் நம்பிக்கையும் கடவுட் பற்றும் உடையவராக இருப்பர் என்பது சொல்லாமலே விளங்கும். திருவள்ளுவர் கூறிய "கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்ருள் தொழாஅர் எனின்" என்ற திருக்குறள் தமிழாசிரியருக்கு என்றும் உவகை அளிக்கும் ஒரு பொன்மொழி என்பதில் ஐயமில்லை. எனவே, கற்றுத் தேர்ந்ததன் நோக்கங்களில் தலையாயதாய இறைவணக்கம் அவர்களுடைய உடம்போடும் உயிரோடும் ஒட்டியது ஒன்ரும். அவ்வாறு இருப்பவும், எங்கேயாவது யாராவது ஒரு தமிழாசிரியர் கடவுள் நம்பிக்கை குறைவாகவுடையவராகவோ, கடவுள் நம்பிக்கை அற்றவராகவோ காணப்பட்டால், அதுகாரணமாகத் தமிழாசிரியர் அனைவரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பது போல் கருதப்படுகின்ற கருத்து தக்கது அன்ரும். கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்கின்ற ஆசிரியர்கள் ஏனைய துறைகளிலும்தான் காணப்படுகிருர்கள். ஆனுல், பொதுவாக அவர்களைப் பற்றி எவரும் ஒன்றும் சொல்லிவிடாமல், தமிழாசிரியர் என்றவுடனேயே அவர் கடவுள் நம்பிக்கையின் கண்ணே ஐயுறுகிருர்கள். இதற்குச் சிறந்த காரணமாக இருக்கக் கூடியது தமிழாசிரியர்களின் தமிழ்ப் பற்றே ஆகும் போலும். தமிழாசிரியர்கள் சிலர் தமிழ்மொழியிலேயே தமிழ்மக்களின்வாழ்க்கைச் செயல்முறைகள் அமைய வேண்டும் என விளம்புகிருர்கள், நடத்தியுப் காட்டுகிருர்கள். பிறந்த நாள் தொட்டு நடைபெறுகின்ற சடங்குகளிலும், திருமணங்களிலும், கடவுள் வழிபாட்டிலேயும், நீத்தார் வழிபாட்டிலேயும், தமிழ்மொழி இடம்பெற வேண்டும் என்பது பல தமிழாசிரியர்களின் ஒப்ப முடிந்த கருத்து. இக்கருத்து உடையோரை தவறுதலாகச் சில வேளைகளில் சிலர் கடவுட் பற்று உடையவர் அல்லர் எனக் கூறிவிடுகிருர்கள். அது பொருந்தாது. உதாரணமாக, இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியாராகத் தொண்டாற்றி வந்த திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ , எம்.எல்., அவர்கள் தமிழர்தம் செயல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும் என விரும்பினவர். அதனுல், தில்லை நடராஜர் கோவிலுக்கு அவர் சென்ருலும், வடமொழி வாயிலாக அர்ச்சனை செய்துகொள்ள விருப்பம் இல்லாதவராகத்தான் கடைசிவரை வாழ்ந்து காட்டினுர்கள். அதற்காக, அவரை நாத்திகர் என்று சொன்னவர்கள் கூட உண்டு. இதிலிருந்தே அறியப்படும், ஒருவருடைய தமிழ்ப் பற்று சில வேளைகளில் பிறழ

உணரப்பட்டு, அதுகாரணமாக ஏச்சுரையும் பேச்சுரையும் நிகழ்த்துவிக்க இடமாகின்றது என்பது.

நம்முடைய சமயத் தலைவர்கள் அனைவரும் நமக்குக் கற்பித்திருப்பது ஒரு கடவுள் வழிபாடும் ஒருமையுணர்ச்சியும் ஆகும். அதனால் கண்ட கண்ட கடவுளரை வணங்காமல் அவரவர் விருப்பத்திற்கு உகந்த யாதாவது ஒரு கடவுளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொண்டு, கருதிக் கொண்டு, ஒருவர் வழிபடுவார் எனின், அவரைக் குற்றம் கூறும் அளவு நாம் செல்லுதல் கூடாது. உண்மையிலே, புறவேடம் கொள்ளாமலும் கோயில் செல்லாமலும் உள்ளத்திலேயும் வீட்டிலேயும் கடவுளை வழிபட்டு உய்யக்கூடிய பெருமையுடைய தமிழாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஆனால், மாணவர்களுக்குக் கற்பிக்கின்ற வேளைகளில் மாணவர்களுடைய கடவுள் உணர்ச்சி குன்றாமலும், மாணவர்களுடைய கடவுள் உணர்ச்சியைத் தூண்டக் கூடிய வகையிலேயும் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் என்றால், அது ஒப்புக்கொள்ளவேண்டியதே. புறவேடம் கொள்ளாமலும் உருவ வழிபாடு இல்லாமலும் சிறுவர்களுடைய மனம் ஒன்றன் கண்ணே பற்றுக் கொள்ளாமலும் கண்டவிடத்தில் திரிந்து கடவுளைப் பற்றித் திட்டமான தொரு கொள்கையைப் பற்ற முடியாமல் போகும் என்ற கருத்தினாலே, மாணவர்களுக்கு உருவவழிபாட்டின் அவசியத்தையும், சமயசின்னங்கள் அணிவதன் அவசியத்தையும் ஆசிரியர்கள் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்றால், அதுவும் பொருத்தமானதே. அன்றியும், பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கப்படுகின்ற நூல்களில் வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் முதலானவற்றைக் கற்பிக்குங்கால், ஆராய்ச்சி செய்து இளைய மாணவர்களுடைய உள்ளங்களில் ஐய வினாக்களை ஆசிரியர்கள் எழுப்பி விட்டுவிடக்கூடாது என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதே. இவ்வண்ணம் ஆசிரியர்கள் செய்துவிடுதல் இல்லை யென்றே நான் நம்புகிறேன்.

தமிழ் ஆசிரியருள் ஒருவனாகிய நான் என் நண்பர்களாகிய நீங்கள் நடந்துகொள்ளவேண்டிய விதம்பற்றி ஒரு சொல் சொன்னால் தவறுதலாகக் கருதமாட்டீர்கள் என்றே நம்புகிறேன். நாம் பணியாற்றும் கல்லூரியிலாயினும், பள்ளிக்கூடத்திலாயினும் சட்ட திட்டங்கட்கு உட்பட்டு நாம் நடந்து மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். சில வேளைகளில் தேசிய கீதமாகிய —ஜன கன மன—பாடவேண்டிய நிகழ்ச்சிகளும் இடங்களும் அமைகின்றன. அந்நேரங்களில், ஹிந்தியில் நமக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாது போனாலும், அது தேசிய கீதம் ஆனதால், அது பாடப்படும் பொழுது நேர் நின்று, மரி

யரதையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தத் தக்கது. அதனைப் பாடும் பொழுது கூட்டங்களில் இருந்து எழுந்து போய்விடுதல் என்பது ஒவ்வாது. இவ்வகையில் நாம் மாணவருக்கு வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும்.

இந்நேரத்தில் நான் இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டிலே சில கல்லூரி மேடைகளிலேயும், உயர்தரப் பள்ளிக்கூட மேடைகளிலேயும் "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" என்ற பாரதியார் பாட்டினைப் பாடுவதற்குப் பலர் ஏற்பாடு செய்கிறார்கள். அந்நேரங்களிலே அப்பாடலில் வருகின்ற "ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்று வருகின்ற காரணத்தால் அப்பாடலை அவ்வண்ணம் பாடுதற்கு உளம் தாளாமல் இருக்கின்ற தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் உண்டு என்பதை அறிவேன். இவ்வாறு மாணவரும் ஆசிரியரும் இருப்பாரேயாயின், அதுகாரணமாக அவர்களை நாத்திகர் என்றோ, தேசத்துரோகிகள் என்றோ கூறிவிடுதல் பொருந்தாது. ஆரிய நாட்டினர் என்ற இந்தப் பாட்டிலே வருகின்ற பகுதி பாரத நாட்டினர் என்று பொருள்படும், அதனால் இந்தியா தேசத்தினர் செய்யும் முயற்சிகள் ஓங்குக என்று பொருள் கொள்ளக்கூடிய வகையில் பாட்டு அமைகின்றது என்று சிலர் சொல்லுதல் இயலும். ஆயினும், இந்தப் பாட்டினைப் பாடிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரே தமிழ்மொழியினை ஆரியத்தினின்று வேறுபடுத்தி ஆரியத்துக்குச் சமமாகத் தமிழ்த்தாய் வாழ்ந்தாள் என்றவாறு இன்னொரு பாடலில் கூறியுள்ள காரணத்தாலே ஆரிய மொழி வேறு, தமிழ்மொழி வேறு என்ற கருத்துடையவர் அவர் என்பது அறியப்படும். தமிழ்த்தாய்க் கூற்றாக அவர் அமைத்திருக்கின்ற ஒரு பாட பாடலிலே "ஆன்ற மொழிகளினுள்ளே — உயர் ஆரியத்துக்கு நிகர் என வாழ்ந்தேன்" என்று அமைத்துப் பாடியிருக்கின்றார். ஆனதால் வடமொழி வேறு தமிழ்மொழி வேறு என அவர் மதித்தார் என்பது அறியப்படும். இதனால், அறிவும் சாதுரியமும் வாய்ந்த கூட்டம் அமைப்பாளர்கள் செய்யவேண்டிய பணியாதெனின், "வாழிய செந்தமிழ்" என்ற பாட்டைப் பாட ஏற்பாடு செய்யும்பொழுது, "ஆரிய நாட்டினர்" முதலாவதாக வருகின்ற அடிகளை விடுத்துப் பாட ஏற்பாடு செய்யவேண்டும் என்பதே. ஆயினும், இப்பாடலை உள்ளபடியே ஒரு மேடையிலே ஒருவர் பாடிவிட்டால், அந்தக் கூட்டத்தில் உடனே குழப்பத்தை விளைத்துவிடாமல் தலைமை ஆசிரியரையோ கூட்ட அமைப்பாளரையோ பிறகு கண்டு அவ்வாறு இனிச் செய்யலாகாது என்று எடுத்துச் சொல்லி, அவ்வண்ணம் மேற்

கொண்டு செய்யாமல் பாதுகாத்துக்கொள்வதே தமிழாசிரியர் பொறுப்பும் கடமையும் ஆகும். அன்றி, அப்பாட்டையே பாடுதற்கு ஏற்பாடு செய்யாமல், "வாழ்க நிரந்தரம்—வாழ்க தமிழ் மொழி— வாழிய வாழியவே" என்ற தொடக்கத்திலே பாரதியார் பாடியுள்ள தமிழ்மொழி வாழ்த்தினைப் பாட ஏற்பாடு செய்வது இன்னும் விரும்பத்தக்கதாகும்.

இவை என் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள். இவற்றைச் சிந்திக்குமாறு உங்களைக் கேட்டுக்கொண்டு, நீவிர் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். இம்மாநாடு வெற்றியுடன் நடைபெறுமாறு அருளும்படி இறைவனை வேண்டிக்கொண்டு உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

---

(22–ம் பக்கத் தொடர்ச்சி)

" தூக்க முடியவில்லையே!" என்று கூறி, பத்துப் பேர் தூக்கி என்னை ஒரு வண்டியில் ஏற்றினார்கள்! வண்டி நகர்ந்தது! "நன்றி கெட்டவர்களே! நன்றி கெட்டவர்களே!" என்று கதறினேன்.

என் பழைய எஜமானர் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், சிகப்பன் என்ற தன் புதிய மாட்டைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்!

---

## சாணியிலிருந்து வெளிச்சம்!

மாட்டுச் சாணத்திலிருந்து ஒரு வித வாயுவை (gas) எடுக்கும் முறையை லக்ஷ்மணபுரி விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த வாயுவைக் கொண்டு உணவு சமைக்கவும் விளக்கு எரிக்கவும் முடியும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை (அக்டோபர் 29, 1953) கூறுகிறது.

அக்டோபர் மாதக் கடைசியிலே லக்ஷ்மணபுரியில் நடந்த பாரத்மீயன் உத்தர் பிரதேஷ் (பொருட் காட்சியில்) இந்த நூதனம் பொது மக்களுக்குக் காட்டப்பட்டது.

வாயுவை எடுத்த பிறகும், சாணத்தை எருவாக உபயோகிக்கலாமாம்.

உத்தரப் பிரதேச சர்க்காரின் ஸ்தல சுய ஆட்சி இலாகாவைச் சேர்ந்த இன்ஜினீயர்களே இந்தச் சாதனையைப் புரிந்தவர்கள்.

வரலாறு :—

# மார்ண்ட் கால்பர் சகோதரர்கள்

[பிரகாசம்]

1873ம் ஆண்டு ஜூன் திங்கள் 5ம் நாள் மாலை நேரம். பிரெஞ்சு நாட்டின் அழகிய நகரங்களில் ஒன்றான அனோனேயில் (Annonay) ஒரே கூட்டம். ஆடம்பர உடையணிந்த பிரபுக்கள், அவர்கள் மாளிகையிலே உலவும் காரிகைகள், பொதுமக்கள், பாட்டாளிகள் அனைவரும் அவசரமின்றி செல்கின்றனர். அன்று ஸ்டேட் ஜெனரலின் உறுப்பினர்கள் அங்கே வந்துள்ளனர். அந்த நகரத்தின் தோற்றம் விடுமுறை நாட்களைப்போன்றிருந்தது. தினசரி காணப்படும் நிலைமையில்லை. எல்லா மக்களும் ஒரே இடத்துக்குச் செல்கின்றனர். விருந்தினர்கள், இச் சம்பவத்துக் கென்றே அழைக்கப்பட்டோர், சர்க்கார் அதிகாரிகள் அனைவரும் கூடியுள்ளனர். பெரியதோர் மைதானம். அதன் மத்தியில் அதிசயப் பொருள் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. லினன் துணியினால் செய்யப்பட்ட பொருள் அது. உருண்டை வடிவமாகத் தயாரிக்கப் பட்டிருந்தது. அதன் அருகே நெருப்புமூட்டி அப்புகையை அப்பொருளின் உள்ளே செலுத்துகின்றனர். சுற்றி நின்ற மக்கள் கூட்டம் கேள்விக்குறியுடன் அப்பொருளைப் பார்த்து நின்றது. அமைதியாக நின்றவர்கள் "ஆ!" என்று கூச்சலிட்டனர். லினன் துணியினால் செய்யப்பட்டிருந்த பொருள், திடீரென்று உப்பியது. கொஞ்சம் கொஞ்சமாக உயரமாக எழும்பியது. 'பலூன்' போன்ற வடிவம் வானத்தை நோக்கிச் செல்வதைக் கண்ட மக்கள் ஒரே ஆரவாரம் செய்தனர். உயரச் செல்லுகிறது. வானத்தில் வெகு தூரம் சென்றதும் பறவை ஒன்று பறப்பதுபோல் தோன்றியது. பத்து நிமிஷங்கள் சென்றன. உயரே சென்ற பலூன் வேகமாக கீழ்நோக்கித் திரும்பியது. புறப்பட்ட இடத்திலிருந்து அரை மைல் தூரத்திற்கப்பால் கீழே வீழ்ந்துவிட்டது. மக்கள் கூட்டம் கலைந்து சென்றுவிட்டது. இரண்டு பேர்மட்டும் அந்த பலூன் வீழ்ந்த இடம் நோக்கி ஓடினர். அவர்கள் முகத்திலே மகிழ்ச்சி. ஆம், மனிதன் வானத்தை வென்றுவிட்டான். வான ஊர்தியை முன்மொழியும் பலூன் உலகில் முதல் தடவையாகப் புறப்பட்டுவிட்டது. அதோ ஓடுகிறார்களே இரண்டுபேர், ஜோசப் மைகேலும், ஜாகுவஸ்மாண்ட் கால்பரும் (Joseph Michael, Jacques Etienne Montgolfer), அந்த இரண்டுபேருந்தான் பலூனை உலகுக்கு அறிமுகப் படுத்தியவர்கள். வான ஊர்தி

என்று நாம் அழைக்கும் ஆகாய விமானத்தின் வழிகாட்டிகள். தரை, கடல், வானம் மூன்றையும் மனிதன் வெல்லமுடியும் என்று கூறியவர்கள்.

## பிறப்பு

ஜோசப் மைகேல் 1740 லும், மாண்ட் கால்பர் 1745 லும் பிரான்சு நாட்டின் நகரான அனே னேயில் பிறந்தார்கள். அவரது தந்தையார் பேப்பர்மில் ஒன்றின் முதலாளி. மைகேல் சிறு வயதில் கல்வியில் ஊக்கம் உடையவராகக் காணப்பட்டார். அனேனே கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். தந்தையின் பேப்பர் மில்லில் தனது திறமையின் மூலம் பல அபிவிருத்திகள் செய்தார். மில்லில் இவர் கூறிய மாற்றங்களைச் செய்ய இவரது தந்தை ஒப்புக்கொள்ளவில்லை. இயற்கையிலேயே சுதந்திர உணர்ச்சியுடைய மைகேல் தனியாகச் சென்று வைரன் (Vairon) என்னும் நகரில் அகஸ்டின் என்பேருடன் புதிய பேப்பர் மில் ஒன்றைத் துவக்கினார். ஆனால் இவரது புதுமுறைகளைக் கையாளும் அளவுக்குப் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. 1770ல் திருமணம் செய்துகொண்டு மில் நிர்வாகத்தைத் தன்குடும்பத்தாரிடம் ஒப்படைத்து விட்டு, விற்பனையை அதிகரிக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டார். கால் நடையாக பிரெஞ்சு நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்ற போது இவர் உள்ளம் விஞ்ஞான ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று இவரைத் தூண்டியது. அத்துறையில் இவருக்குப் பயன் ஏற்படாது போகவில்லை. அச்சு இயந்திரத்தில் புது முறைகளைக் கண்டுபிடித்தார். நெருப்பணைக்கும் பம்பு அமைப்பு முறையில் புதிய 'செட்' ஒன்றைத் தயார் செய்தார். பின்பு இவரது உள்ளம் வான ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அதே நேரத்தில் மாண்ட் கால்பரின் எண்ணமும் மைக்கேலைப் போன்றிருந்தது.

மாண்ட்கால்பர் தன் வாழ்க்கையை சிற்பத் துறையில் ஈடுபடுத்த எண்ணினார். சௌபோட் (souffot) என்னும் சிற்பியிடம் சிறிது காலம் தொழில் பயின்றார். சிற்பக்கலை அவருக்கு வெற்றியளிக்கவில்லை. தன் தந்தையின் தொழிலின் மீது அவரது கவனம் சென்றது. பேப்பர் மில்லில் இவரது உழைப்பின் மூலம் ஏராளமான லாபம் கிடைத்தது. தொழில் உள்ளம் கொண்ட மனிதனின் ஆவல் தணிவது கிடையாது. புது ஆராய்ச்சிகள் ஏதேனும் செய்து அதன் மூலம் மக்களிடையே மதிப்பு பெற வேண்டுமென்று மாண்ட்கால்பர் நினைத்தார். அன்று உலகில் மனிதன் தன் கவனத்தைச் செலுத்தாத இடம் வானம் தான். மாண்ட்கால்பர் சகோதரர்கள் வாழ்ந்த காலம், வால்டேரின் அறிவுரைகள், ரூசோவின் சுதந்திர முழக்கம், குடியரசு தத்துவ வாதிகளின் அறைகூவல் இத்தனையும் சேர்ந்து பிரஞ்சு நாட்

டில் கேட்டுக் கொண்டிருந்த காலம். அங்கே வாழ்ந்த மக்கள், மறுமலர்ச்சியை நோக்கிச் சென்ற நேரம்.

## ஆராய்ச்சி

இரண்டு சகோதரர்களும் சேர்ந்து தங்கள் ஆராய்ச்சியினைத் துவக்கினார்கள். வானத்தில் ஊர்ந்து செல்லும் மேகங்களைக் கண்ணுற்றார்கள். மேகத்தில் உள்ள வாயுக்கள் போன்று பெரிய பை ஒன்றில் வாயுக்களை நிரப்பினால் அப் பை உயரப் பறந்து செல்லும் என்ற முடிவிற்கு வந்தார்கள். பாரசூட் போன்ற துணிகளினால் உயரமான இடங்களிலிருந்து கீழே குதித்துப் பார்த்தார்கள். ஏழு அடி வட்டமுள்ள குடை ஒன்றை இணைத்தார்கள். கூடையில் ஆட்டுக் குட்டி ஒன்று வைக்கப்பட்டது. அவிக்னனன் நகரில் உள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து அக் கூடையை கீழே அனுப்பினார்கள், அனோனேயில் உள்ள உயரமான மாளிகை ஒன்றின் உச்சியிலிருந்து மைகேல் பாராசூட் மூலம் கீழே குதித்து வெற்றியடைந்தார்.

மாண்ட் கால்பர், ஓர்நாள், கொடியில் காய்ந்து கொண்டிருந்தசட்டை ஒன்றைக்கவனித்துக் கொண்டிருந்தார். காற்று வேகத்தில் சட்டையினுள் காற்றுப் புகுந்து அது பருமனாகி உயர எழும்புவதைக் கண்ணுற்றார். அவர் மனதில் அப்போது தான் 'பலூன்' பற்றிய நினைவு ஏற்பட்டது. அதன் பயன் 1783-ம் ஆண்டு ஜூன் திங்கள் 5-ஆம் நாள் உலகில் முதல் பலூன் பறக்கவிடப்பட்டது.

## உலக கவனம்

மாண்ட் கால்பர் சகோதரர்களைப் பின் பற்றி ஐரோப்பா வெங்கும் பலூன்கள் பறக்கவிடப்பட்டன. வானத்தைவெல்ல வேண்டுமென்ற மனிதனின் நீண்ட நாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யப் பலர் முயன்றனர். 1783 ஆகஸ்டில் ராபர்ட் சகோதரர்கள் என்போர் ஜே ஏ. சி. சார்லஸ் என்னும் விஞ்ஞானியின் உதவியால் பலூன் ஒன்று தயாரித்தார்கள். இப் பலூன் சில்க் துணியினால் செய்யப்பட்டு அதன் மேல் வார்னிஷ் பூசப்பட்டிருந்தது. இதனுள் புகையைச் செலுத்துவதைவிட ஹைட்ரஜன் வாயுவைச் செலுத்துவது பயன் உள்ளது என்பதைக் கண்டறிந்தார்கள். இதனுள் வாயுவை நிரப்ப மூன்று நாட்கள் பிடித்தது. ஆனால் இப் பலூன் வானில் ஒரு மணி நேரம் தங்கியிருந்தது. அமெரிக்காவில் பிலடெல்பியா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தினர் பலூன் பரிசோதனை செய்தார்கள். 1785 ஜனவரி 7ம் நாள் அன்று, பலூன், ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சென்று விட்டது. பிரான்சு நாட்டிலிருந்து அனுப்பிய பலூன் ஒன்று கடல் தாண்டி ஆங்கில நாடு போய்ச் சேர்ந்தது.

## அரசர் அழைப்பு

அனோனியில் நடைபெற்ற பலூன் பரிசோதனை பற்றிய செய்திகள் பாரீஸ் நகரை எட்டின. பிரெஞ்சு அரசாங்க விஞ்ஞான கழகம் இந்த சகோதரர்களுக்கு அழைப்பு அனுப்பியது. இவர்களது சேவை போற்றத்தக்கது. விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவையானது என்று அக்கழகத்தினர் முடிவு செய்தனர். மன்னன் பதினாறாவது லூயி இவர்களுக்குப் பரிசளித்தான். மைகேலுக்கு நாற்பதினாயிரம் லிவர்கள் (நமது நாட்டு ரூபாய்கள் போன்று மதிப்புடையது) பென்ஷன் அளித்து லூயி மன்னன் இவர்களைப் போற்றினான்.

1783 செப்டம்பர் 19ம் நாள் பிரான்சுப் புரட்சியில் கில்லெட்டினில் மாண்டு போன லூயி மன்னன், அவன் மனைவி அஸ்திரியாவின் இளவரசி மேரி அண்டாய்னி' இவர்கள் முன், மாண்ட் கார்பல் சகோதரர்கள். பலூன் ஒன்றைப்பறக்கச் செய்து மன்னர் தம்பதிகளை மகிழச் செய்தனர். அந்த பலூனுடன் ஒரு கூடையில் ஆட்டுக்குட்டி, சேவல், வாத்து இப் பிராணிகளும் அனுப்பப்பட்டன. அவைகளும் தங்கள் பலூன் பிரயாணத்தை நன்று முடித்துக் கொண்டு திரும்பின. ஆனால் கோழியின் வலது சிறகுமட்டும் ஆட்டுக்குட்டியின் தாக்குதலால் புண்ணாகிப் போயிருந்ததாம். இந்தக் காயம் பெலூன் உயரச் செல்லு முன்பே ஏற்பட்டது என்று தீர்ப்புக் கூறினார்கள். அங்கே கூடியிருந்த மக்கள்.

## வானத்தில் மனிதன்

பிரான்ஸ் நாட்டில் அக்காலத்தில் ஒரு மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய அதிகமான பரிசு மன்னரின் அன்புதான். மாண்ட்கால்பர் சகோதரர்களுக்கு மன்னரின் பரிசும் கிடைத்தது. ஆனால் அவர்கள் மனம் நிம்மதி அடையவில்லை. மனிதன் உயரே செல்லவேண்டும். அது தானே அவர்கள் குறிக்கோள். தாங்கள் விரும்பும் கருத்துக்கள் மன்றத்தால் ஒப்புக்கொள்ளப்படும் வரை, தங்களது ஆராய்ச்சியின் பயனை மனித இனம் பயன்படுத்தும் வரை, சமுதாயம் தம் அறை கூவலை ஏற்று நடக்கும் வரை, அறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் என்போரின் உள்ளம் ஓய்வு பெறுவதில்லை. அதுபோல் மாண்ட்கால்பர் சகோதரர்கள், மனிதன் வானத்தில் செல்ல வேண்டுமென்று விரும்பினார்கள். 1783 அக்டோபர் 15ம் தேதியன்று ஜியன் பிரான்காயிஸ் பிலேட்ரே என்பவர் முதல் தடவையாக பலூனில் அமர்ந்து வானத்தில் பறந்து சென்றார். ஒரு மாதம் சென்ற பிறகு ஆர்லியன் பிரபு பலூனில் உல்லாசப் பிரயாணம் செய்தார். 1784-ல் இவர்கள் செய்த பலூன், லா கஸ்டவ் (La Custave) என்ற பெயரிடப்பட்டு ஏழு பிரயாணிகளை ஏற்றிச் சென்றது. அப்பிரயாணிகளில் ஒருவரான

மாடம் டிபில் (Madam Tible) என்னும் பெண் மணிதான் வானத்தில் முதலில் பிரயாணம் செய்த பெண்மணியாவர்.

### பின் வாழ்வு

பேப்பர் மில் தொழிலில்வெற்றி காணமுடியாத மாண்ட் கால்பர் சகோதரர்கள் வானத்தை வெல்ல முடியும் என்பதை நிரூபித்தார்கள். ஒரு தொழிலில் வெற்றி காணமுடியாத மனிதன், யாரும் எதிர்பாராத வகையில் வேறு தொழிலில் வெற்றி காண்பதைக் காண்கிறோம் நாம். மாண்ட் கால்பர் சகோதரர்கள் பலூன் உயரே செல்வதற்கு அதன் உள்ளே செலுத்தப்படும். வாயு தான் காரணம் என்று நம்பினார்கள். வெப்பத்தின் மூலம் பருமனில் அதிகமாகும் காற்றுதான் அதற்குக் காரணம் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் வானவூர்தி என்று நாம்அழைத்து பெருமைப்படும் விஞ்ஞானத்தின் கருவியைப் பாருங்கள். நன்றாகக் கவனியுங்கள். அதன் பின்னே இரண்டுபேர் பலூன் விடும் காட்சி தெரியும். விஞ்ஞானம் தன்னிடம் அடைக்கலம் புகுந்த எந்த மனிதனேயும் மறந்துவிடுவது கிடையாது. ஜாகுவஸ் மாண்ட் கால்பர் 1789 ல் மாண்டுபோனார். அது தான் அவரது சரிதம். மைக்கேல் தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினார். 1792ல் நடைபெற்ற புரட்சியின் போது மரண தண்டனை விதிக்கப்பட்ட தன் நண்பர்கள் பலரை மீட்பதில் அவர் செல்வாக்கு அத்தனையும் பயன்படுத்தினார். புரட்சித் தீ அவரது தொழிலையும் நாசமாக்கியது நாட்டில் அமைதி ஏற்பட்டதும். அவர் பாரீஸ் நகரம் சென்றார். 'மனிதனே நீ ஏன் வானத்தில் பறந்து செல்லக் கூடாது ? பறவைகளைப் பார். அவைகளுக்கு வானத்தில் செல்ல சக்தி இருக்கிறது. உன்னிடம் அச்சக்தி இல்லையா?' என்று விஞ்ஞானிகள் உள்ளத்தைத் தட்டி எழுப்பி, மனித வாழ்வில் புது அத்தியாயம் ஒன்றை எழுதுமாறு செய்த ஜோசப் மைக்கேலுக்கு பாரீசில் கலைக் கழகம் ஒன்றில் தான் வேலை கிடைத்தது. சிலகாலம் சென்ற பிறகு, அரசாங்கம் அவரை, அரசாங்க கலை இலாகாவிற்குத் தலைமை அதிகாரியாக்கிற்று. பலூன் பரிசோதனைகள் பற்றி மைக்கேல் புத்தகங்கள் எழுதினார். நோயினால் வருந்தி 1880ல் ஜோசப் மைக்கேல் இயற்கை எய்தினார்.

இன்று சாதாரண மனிதனுக்கு மாண்ட் கால்பர் சகோதரர்களின் பெயர் மிகவும் சாதாரணமானதாகத் தெரியலாம். வானத்தில் பறந்து செல்லும் அழகிய விமானம், எதிரியின் நாட்டின் மீது எதிரியின் குண்டு மாரி பொழியும் கோட்டை விமானங்கள், ஏன் ஆடிக்காற்றிலே சிறுவர்கள் பறக்கவிடும் பட்டம் இவைகளைக் காணும் போது, மாண்ட்கால்பர் சகோதரர்களின் பெயர் நினைவிற்கு வராமல் போகாது.

சீவக சிந்தாமணியில் விமானம் சென்றதாம், மயானத்தில் இறங்கியதாம். இங்கே இலக்கியம் உண்டு. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றானும் விமானம் ஒன்றின் மூலம், இன்றும் அப் புராணத்தை நம் நாட்டில் படிக்கிறார்கள். ஆனால் விமானத்தில் காதலர்கள், அரசியல்வாதிகள், போர் வீரர்கள், ஏன்—குரங்குகள், யானைகள், அதிசயப் பறவைகள் அனைத்தும் விமானம் மூலம் செல்கின்றன. அதற்கு வழிகாட்டியவர்கள் மாண்ட் கால்பர் சகோதரர்கள். ஒரு காலத்தில் பறவை இனம் மட்டும் தான் வானத்தில் பறந்து செல்லும் வல்லமை பெற்றிருந்தது. இப்போது மனிதனுக்கும் அந்த வல்லமையிருக்கிறது. மனிதனுக்கு வல்லமை உண்டு என்று எடுத்துக்காட்டிய மாண்ட் கால்பர் சகோதரர்களின் பெயரைப் போற்றுவோம்.

—'தீப்பொறி.'

---

## மதிப்புரை

# தமிழ்ச் சுவடி

## (Tamil Stat & Dest Work)

### (ஆசிரியர் வித்துவான் பெ. அண்ணாமலையார்)

**தலைமைத் தமிழாசிரியர், ஆர்ச் கேபிரியல் உயர்நிலைப்பள்ளி, சென்னை—1.**

இந்நூல் தமிழ் எழுத்துக்களின் அடிப்படை வேற்றுமையாகிய குறில், நெடிலையும், எழுத்துக்களின் உருவ ஓசை வேறுபாட்டையும் விளக்கும் புத்தம் புதிய நூலாகும். 32 பயிற்சிகளையும் 28 விளக்கப் படங்களையும் கொண்டுள்ளது. எழுத்தறிந்த இரண்டு, மூன்றாம் வகுப்பு மாணவர்கட்கும் கல்வி கற்கும் முதியோர்களுக்கும் பெரிதும் பயன்படக்கூடியது. ஆசிரியர்களுடைய சிரமத்தைக் குறைத்து எளிதில் பயிற்சி அளிக்கவல்லது; பொருளறியும் சக்தியை வளர்ப்பது. இந்நூலுக்கு முன்னாள் டெபுடி டைரக்டர் உயர்திரு S. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் மதிப்புரை அளித்துள்ளனர் என்றால் மேலும் விளக்கம் தேவையில்லை. இந்நூல் "தமிழ்க் கடலுள் புகும் சிறுவர் சிறுமியர்க்கு ஒரு துடுப்பாகப் பயன்பெறும்" என்று ஆசிரியர் தம் முன்னுரையில் கண்டிருப்பது முற்றிலும் பொருத்தமாகும்.

இதன் விலை 5 அணா. மாதிரிப் பிரதி வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

**பச்சையப்பன் பதிப்பகம்,**
யானை கௌனி. சென்னை.

# செய்திச் சுருள்

## ஜில்லா போர்டு தேர்தல்

அண்மையில் நடைபெறவிருக்கிற ஜில்லா போர்டு தேர்தலை யொட்டி, சென்னை மாநிலத்தின் 13 ஜில்லாக்களை நான்கு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர் சென்னை அரசினர். முதல் பகுதியில் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்கள் அடங்கும். இரண்டாவது பகுதியில், சேலம், கோயமுத்தூர், வடவார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களும், மூன்றாவது பகுதியில், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், நான்காவது பகுதியில், நீலகிரி, தென்கன்னடம், மலையாள மாவட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

முதல் பகுதியில் உள்ள மாவட்டங்களின் ஜில்லா போர்டு உறுப்பினர் பதவிக்கான நாமிநேஷன் தாள்கள் அனுப்புதற்கான தேதிகள்: ஜுலை 31, ஆகஸ்டு 1. தேர்தல் நடைபெறும் தேதிகள்: செப்டம்பர் 5, 8. வோட்டுகள் எண்ணப்படும் தேதி. செப்டம்பர் 10. ஒவ்வொரு மாவட்டமும் இரண்டிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒரு பகுதியில், செப்டம்பர் 5–ந் தேதியும்; மற்றைய பகுதியில் செப்டம்பர் 8–ஆந் தேதியும் நடைபெறும்.

மதுரை மாவட்டம்:—43 பொதுத் தொகுதிகள், 7 தனித் தொகுதிகள் (ஆதித்திராவிடர்), 2 பெண்கள் தொகுதிகள்.

மொத்தம் 52 உறுப்பினர்கள்.

இராமநாதபுரம் மாவட்டம்:—42 பொதுத் தொகுதிகள், 6 தனித் தொகுதிகள், 2 பெண்கள் தொகுதிகள். மொத்தம் 50 உறுப்பினர்கள்.

திருநெல்வேலி:—45 பொதுத் தொகுதிகள், 5 தனித் தொகுதிகள், 2 பெண்கள் தொகுதிகள். மொத்தம் 52 உறுப்பினர்கள்.

இரண்டாவது பகுதியில் உள்ள மாவட்டங்களுக்கு நாமிநேஷன் தேதிகள்: ஆகஸ்டு 18, 19. தேர்தல் தேதிகள்: செப்டம்பர் 25, 29.

மூன்றாவது பகுதியில் உள்ள மாவட்டங்களுக்கு நாமிநேஷன் தேதிகள்: ஆகஸ்டு 24, 25. தேர்தல் தேதிகள்: அக்டோபர் 3, 7.

நான்காவது பகுதி மாவட்டங்களின் நாமிநேஷன் தேதிகள்: செப்டம்பர் 13, 14. தேர்தல்: அக்டோபர் 17, 20.

## தென்னிந்தியாவில், தலைவர்!

இந்தியக் குடியரசின் தலைவர் திருவாளர் ராஜேந்திர பிரசாத், இனி, ஒவ்வோராண்டிலும் சில

வாரங்கள், தென்னிந்திய ராஜ்யங்களின் தலைநகரம் ஒன்றில் தங்கியிருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் வாழ்வில் தென்னிந்தியாவுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்று பலராலும் தெரிவிக்கப்படுகிற குற்றச் சாட்டிற்குப் பதில் அளிக்கும் முறையில் மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல நடவடிக்கைகளில் இது ஒன்று என்று கருதப்படுகிறது.

## உணவுக் கட்டுப்பாடு, இனி இல்லை!

எல்லாவகையான உணவுக் கட்டுப்பாடுகளும் ஜுலை 10-ம் நாள் முதல் ரத்து செய்யப்பட்டு விட்டது என்று மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பின் விளைவாக, இனி, சென்னை அரசாங்கம், உணவுப் பொருட்களை வாங்கி சேமிக்காது. சென்னை மாநிலத்திற்குள் உணவுப் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் கொண்டு போக, இனி, தடை ஏதும் இல்லை என்று தெரியவருகிறது.

## புதிய பல்கலைக் கழகம்

திருப்பதியில் உள்ள வெங்கடேஸ்வரா கல்லூரியைப் பெரியதோர் பல்கலைக் கழகமாக மாற்றியமைத்துச் சிறந்த முறையில் வளர்க்க வேண்டுமென்று ஆந்திர சட்ட சபையில் மசோதா ஒன்று நிறைவேறியிருக்கிறது. இந்த மசோதாவுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் கிடைத்துவிட்டது.

## விவசாய வருமான வரி

சென்னை மாநிலத்தில் உள்ள காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய்த் தோட்டங்களின் உரிமையாளர்கள் மீது விவசாய வருமான வரியை விதிக்க முடிவு செய்திருக்கிற சென்னை அரசாங்கம், அதற்கான மசோதாவை இப்போது தயாரித்து வருகிறது. முதல் 3000 ரூபாய் வருமானத்திற்கு வரி இருக்காது என்றும், அதற்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு, வருமான உயர்விற்கு ஏற்பப் படிப்படியாய் உயரக்கூடிய வரி விகிதம் ஏற்பாடு செய்யப்படும் என்றும் சொல்லப்படுகிறது. சென்னை மாநிலத்தில் மொத்தம் 80,094 ஏகர் நிலத்தில் காப்பியும், 80,356 ஏகர் நிலத்தில் தேயிலையும், 23865 ஏகர் நிலத்தில் ரப்பரும், 7012 ஏகர் நிலத்தில் ஏலக்காயும் பயிரிடப்படுகின்றன. இந்த வரியின் வாயிலாக ஏழு லட்சத்திலிருந்து 12 லட்சம் ரூபாய் வரையில் அரசாங்கத்துக்குவருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அவர்களும் இவர்களும்!

தமிழரசுக் கழகத்தின் நோக்கமும் போக்கும் காங்கிரஸ் கட்சியின் விதிமுறைகளுக்கு மாறாக இருப்பதால், காங்கிரஸ் ஆட்சியில் உள்ளவர்கள் தமிழரசுக் கழகத்திலும் உறுப்பினராக இருந்தால், அப்படிப்பட்டவர்கள், 15 நாட்களுக்குள் தமிழரசுக்கழகத்திலிருந்து விலகிவிட வேண்டு

மென்றும், இல்லையேல், அவர்கள், காங்கிரஸ் ஆட்சியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவார்கள் என்றும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, ஜூலை 18-ம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

## இலங்கையின் முடிவு

தங்களுடைய தற்காலிக வாசஸ்தல பெர்மிட்டுகளின் காலம் முடிவடைந்து விட்டதால் அவற்றைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று இலங்கையில் வாழ்கிற இந்தியர்களில் 25000 பேர் அந்த நாட்டு அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். ஆனால் அந்த அரசாங்கம் அவற்றைப் புதுப்பிக்கப் போவதில்லையாம். தவணைக்கு 5000 பேராக, 25,000 பேரையும், ஐந்து தவணைகளில், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பிவிடுவதென்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவை இந்திய அரசாங்கமும் ஒப்புக்கொண்டு விட்டதாம்.

## கொடுமை! கொடுமை!!

திருவாங்கூர் கொச்சி அரசாங்கத்தின் பஸ் சர்விசில், 100 கண்டக்டர்கள் வேலை காலியாக இருக்கிறது. என்பதை அறிந்து, 8600 பேர் அந்த வேலைகளுக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றனராம். காலியுள்ள வேலை 100. ஆனால் கிடைத்துள்ள விண்ணப்பங்களோ 8600! வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை அந்த அளவோடுகூட நிற்கவில்லை. இந்த 8600 விண்ணப்பத்தாரர்களில் 9 பேர் எம். ஏ. பட்டதாரிகளாம். எத்தனையோ பேர், பி. ஏ. பட்டம் பெற்றவர்களாம், வேதனை! வேதனை! இந்தப் பரிதாபநிலை எப்பொழுது மாறும்?

## நியாயமான ஏற்பாடு

மிளகு, இஞ்சி, மஞ்சள் முதலிய சில பொருள்களைப் பொறுத்தவரையில், அவற்றின் மீது விதிக்கப்படுகிற விற்பனை வரியை பலமுனை வரியாக இருப்பதை எடுத்துவிட்டு, ஒரு முனை வரியாக மாற்றுவதென்று திருவாங்கூர் கொச்சி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இது மிகவும் நியாயமான ஏற்பாடு. ஒரு பண்டம், எத்தனை முறை கைமாறுகிறதோ அத்தனை முறையும் விற்பனை வரி விதிப்பது பல முனை விற்பனை வரியாகும். (Multi point Sales Tax) அப்படியின்றி, ஒரு பண்டம் எத்தனை முறை கைமாறினாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரே ஒரு முறை மட்டும் விற்பனை வரியை வசூலிக்கும் திட்டத்திற்கு ஒரு முனை விற்பனை வரி — Single Point Sales Tax என்று பெயர். ஒரு முனை விற்பனை வரியாக இருந்தால், பண்டம் வாங்கும்போது நாம் செலுத்தும் விற்பனை வரித் தொகை எவ்வளவு என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிடும். ஆனால் பல

முனை விற்பனை வரியாக இருந்தால், அது அப்படித் தெரியாது. அங்கிலையில், நாம் உண்மையில் செலுத்தும் விற்பனை வரித் தொகை மிக அதிகமாக இருக்கும். ஆனால் விற்பனை வரி என்கிற பெயரால் நம்மிடமிருந்து நேர்முகமாக வாங்கப்படும் தொகை மிகக் குறைவாக இருக்கும். அதாவது, விற்பனை வரியின் ஒரு பெரும் பகுதி, பண்டத்தின் விலைக்குள்ளே ஒளிந்துகொள்ளும். இந்த ஆபத்து இல்லை ஒரு முனை வரியில்! எனவேதான் திருவாங்கூர் அரசாங்கத்தின் திட்டம் சிறந்ததாகிறது. நம் பாராட்டு, திருவாங்கூர் கொச்சி அரசிற்கு.

## அறப்போர் அங்கே !

திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற தமிழ் பேசும் பகுதிகளாகிய நாஞ்சில் தாலுகாக்களைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்பதற்காக, திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினரால் அறப் போர் தொடுக்கப்பட்டு, ஜூலை 12—ம் நாள் முதல் தீவிரமாக நடைபெற்று வருகிறது. திருவாங்கூர் தமிழர்களின் கோரிக்கை மிக மிக நேர்மையானது. எனவே வெற்றி பெற்றுத் தீர வேண்டியது. தமிழகத்தின் முழு அன்பும் அவர்கள் பக்கம் என்றும் நிற்கும்.

## தமிழாசிரியர் மாநாடு

சென்னை மாநில இரண்டாவது தமிழாசிரியர் மாநாடு, ஜூலை 11—ந் தேதியன்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பர நாதன் மாநாட்டின் வரவேற்புத் தலைவராகவும், கல்வி அமைச்சர் திரு. சி. சுப்ரமண்யம் திறப்பாளராகவும், தமிழ்ப் பெரும் புலவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைவராகவும் இருந்து அரிய உரை நிகழ்த்தினர். உடனடியாகத் தமிழ், சென்னை மாநிலத்தின் அரசாங்க மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்றும், உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள தமிழாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களின் நிலை அளவுக்காவது உயர்த்தப்பட வேண்டுமென்றும், ஏனைய ஆசிரியர்களைப் போல அவர்களும் வகுப்பாசிரியர்களாகவும் தேர்வு மேற்பார்வையாளர்களாகவும் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுவிலக்கு எதிர்மறியல்

மதுவிலக்குத் திட்டத்தால், மொத்தமாகப் பார்க்கிறபோது நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம் என்பதை வற்புறுத்தியும், அந்தத் திட்டத்தை உடனடியாக ஒழித்துக் கட்டுவதே நல்லது என்பதை எடுத்துக் காட்டியும், ஆந்திர மாநிலத்தில், கிருஷிக் லோக் கட்சியினரால், ஜூலை 18 முதல் தீவிரமான அளவிலும் முறையிலும் மறியல் நடத்தப்பட்டு வருகிறது.

முன்பெல்லாம் மதுவை எதிர்த்து மறியல் நடத்தப்பட்டது. இப்போதோ, மதுவிலக்கை எதிர்த்து மறியல் நடத்தப்படுகிறது. அடேயப்பா! காலம் எவ்வளவு விரைவில் மாறிவிடுகிறது!

## ஜாதகமும் ஜோதிடமும்!

"ஜாதகத்தையும் ஜோதிடத்தையும் கட்டியழுகிற மனப்போக்கு, நம் மக்கள் பலரிடமும் காணப்படுகிறது. பொறுப்புள்ள பதவிகளில் வீற்றிருக்கும் அறிவுள்ள மக்களில் பலர்கூட இந்த விசித்திரமான வியாதிக்கு ஆளாகியிருக்கின்றனர். ஆனால் இது எள்ளி நகையாடத்தக்க வழக்கமாகும். நட்சத்திரங்களை நம்பிக் கொண்டிருந்தால் நம் நாட்டிற்கு ஒருக்காலும் முன்னேற்றம் ஏற்படாது. நம்முடைய இடைவிடாத உழைப்புதான் நமக்கு நன்மையை அளிக்குமேதவிர, ஜாதகப் பைத்தியமல்ல" என்று பேசியிருக்கிறார் பண்டித நேரு. ஜூலை 8–ந் தேதி—நங்கால் என்னும் நகரத்தில். சொல்லவா வேண்டும்! ஜாதகத்தையும் ஜோதிடத்தையும் நம்பி எத்தனைக் குடும்பங்கள் பாழாகியிருக்கின்றன இந்த நாட்டிலே! அப்படிப்பட்ட தவறான மனப் போக்குக்குச் சரியான பாடம் புகட்டியிருக்கிறார் பண்டித நேரு. புகட்டத்தானே வேண்டும் யாரேனும் ஒருவர்!

## ஆசிரியர்களும் முதலமைச்சரும்

அனைத்திந்திய ஆரம்ப ஆசிரியர் மன்றத்தின் தூதுக் குழு ஒன்று, இந்திய முதல்வர் பண்டித நேருவை ஜூலை 6-ம் நாளன்று பேட்டி கண்டு, ஆரம்பக் கல்வி பற்றிய பல பிரச்சினைகளைப் பற்றி உரையாடியிருக்கின்றனர். ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவதில் அரசாங்கங்கள் அதிகப்படி அக்கறை காட்ட வேண்டுமென்றும், கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டத்தை அமுலாக்குவதில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தீவிர சிந்தனை செலுத்த வேண்டுமென்றும், அனைத்திந்திய ஆரம்பக் கல்வியின் நிலையைப் பற்றியும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையைப் பற்றியும் அலசி ஆராய்ந்து சிபாரிசுகளைத் தெரிவிக்க ஆரம்பக் கல்வி கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள், அவ்வமயம், பண்டித நேருவிடம் எடுத்துரைத்தனராம்.

## மக்கள் தொகை—சில விவரங்கள்

1951–ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிமதிப்புக் கணக்கின்படி இந்தியாவின் மக்கள் தொகையில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 13·3 சதவிகிதம்; 5 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர் சிறுமிகள், 24·2 சதவிகிதம்; 15 முதல் 34 வயது வரையுள்ள வாலிபர்களின் சதவிகிதம் 34·3; 35 முதல் 54 வயது வயது வரையுள்ள நடுத்தர வய

(40–ம் பக்கம் பார்க்க)

# மக்கள் மன்றத்தின் மகத்தான வெற்றி!

புன்னகை அரும்புகிறது முகத்திலே ஆனால் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு, அந்தப் புன்னகைக்கு உள்ளே பெருமூச்சுதான் பொதிந்து கிடக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

மகிழ்ச்சி ததும்புகிறது சொற்களிலே. ஆனால் அந்த மகிழ்ச்சியை அலசிப் பார்க்கும் ஆற்றல் படைத்தவர்களுக்கு, அது மகிழ்ச்சி அல்ல, மகிழ்ச்சியைப் போல வேடமிட்டுத் திரியும் மன

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் சதவிகிதம் 19·7. 55 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் சதவிகிதம் 8·5. மொத்த மக்கள் தொகையில். 51·4 சதவிகிதம் ஆண்கள் 48·6 சதவிகிதம், பெண்கள்.

## அவர்களுடைய உயர் நீதிமன்றம்

சென்ற அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து ஆந்திர மாநிலம் தனியாக அமைந்து விட்டது என்றால் இந்த ஆண்டின் ஜூலை 5-ம் நாள்வரை, சென்னை உயர் நீதிமன்றம் தான் அவர்களுக்கும் உயர்நீதி மன்றமாக இருந்து வந்தது. அன்றைய தினம்தான் ஆந்திரர்களின் தனி உயர்நீதி மன்றம், குண்டூரில், மத்திய அரசின் உள்நாட்டமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வேதனை என்பது நன்றாக விளங்குகிறது.

அன்பு தவழ்கிறது கண்களிலே ஆனால் நின்று நிதானித்துக் கவனித்துப் பார்த்தால், அந்த அன்பு உண்மையில் அன்பல்ல—அன்பு என்கிற பெயருடன் உலவும் ஆத்திர உணர்ச்சி என்பது தெளிவாகிறது.

கோபமும் கொதிப்பும் ஆத்திரமும் அவமானமும் தாண்டவமாடுகின்றன நெஞ்சத்தின் உள்ளே! ஆனால் புன்சிரிப்பும் புது மலர்ச்சியும் அன்புச் சொற்களும் அழகான தலையசைப்புகளும் 'காட்சியளிக்கின்றன. புறத் தோற்றத்திலே!

ஆமாம்—அகத்திலே வேதனை —முகத்திலே மகிழ்ச்சி—இது தான் அவருடைய நிலை.

இந்த நிலையிலேதான், அவர், ஜூலை மாதம் 16ம் நாளன்று பகல் 2-மணி அளவில் காட்சி அளிக்கலானார்.

கப்பல் புறப்பட்டது துறைமுகத்திலிருந்து அவரும் புறப்பட்டார் அதிலே. அவருக்காகத்தான் கப்பலே புறப்படுகிறது.

அவர் ஒரே ஒரு மனிதர் அந்த ஒரு மனிதருக்காக, அவருடைய சௌகரியத்துக்காக, தனியாக ஒரு கப்பல் புறப்படுகிறது.

பெருமைக்குரிய நிலைமையிது பொதுவாக. ஆனால் பெருமை ஏற்படவில்லை அந்தப் புண்ணியவானுக்கு பெருமூச்சுதான் உண்டாகிறது. அந்தப் பெருமூச்சையும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை அவரால். அந்தப் பெருமூச்சைப் புன்னகை என்கிற திரைச் சீலைபோட்டு மூடி மறைத்துத் தன் புறத்தோற்றத்தை வேற்று வடிவில்தான் காட்ட வேண்டி யிருக்கிறது.

நெஞ்சிலே பெருமூச்சு—அதனை, வெளியே புன்னகையாகக் காட்டித் தீரவேண்டிய நெருக்கடி—மிக மிக வேதனையூட்டும் நிலை தான் இது—இப்படிப்பட்ட நிலையில்தான் நிறுத்தப் பட்டார் அவர் ஜூலை 16ம் நாளன்று.

அவர் அவர் என்று நாம் குறிப்பிடுவது **மான்ஷிய டெஸ்காம்ப்ஸ்** அவர்களைத்தான்.

யார் இந்த மான்ஷியர் என்கிறீர்களா? பிரஞ்சு ஏகாதிபத்தியம், இந்தியாவிலே, புதுச்சேரி — காரைக்கால் — மாஹி ஏனம் ஆகிய நான்கு பகுதிகளைத் தன்னுடைய இரும்புப் பிடியின் கீழ் சிக்கவைத்து நசுக்கி வருகிறதல்லவா, அந்தப் பகுதிகளிலே, மாஹி என்னும் வட்டாரத்தின் பிரஞ்சு கவர்னர் அந்த மான்ஷியார்.

ஏறத்தாழ 240 ஆண்டுகளாக பிரான்ஸ், மாஹி என்னும் பகுதியை அடக்கி ஒடுக்கி ஆதிக்க வேட்டையாடி வந்திருக்கிறது.

அந்த வேட்டை முடிவடைந்து விட்டது ஜூலை 16ம் தேதி பகல் 12—மணி அளவோடு.

மாஹி பகுதியைப் பொறுத்த வரையில் பிரஞ்சு ஏகாதிபத்தியம் அஸ்தமித்துவிட்டது அன்றைய தினம் முதல்.

அந்தப் பகுதியை இது நாள் வரை ஆண்டு வந்த பிரஞ்சு கவர்னர் மான்ஷியர் டெஸ்சாம்ப்ஸ் அன்று பகல் 2—மணி அளவில், துறைமுகத்தில் தயாராகக் காத்துக் கொண்டிருந்த கப்பலில் ஏறி பிரஞ்சு நாட்டுக்குச் சென்று விட்டார்.

கப்பலேறிச் சென்ற நேரத்திலும் சரி, கவர்னர் டெஸ்சாம்ப்சின் முகத்திலே, புன்னகை ததும்பிக் கொண்டே யிருந்தது என்று பத்திரிகைகள் கூறுகின்றன.

புன்னகை ததும்பியிருக்கலாம் மெய்தான், ஆனால் உண்மையான புன்னகையாகவாயிருக்கும் அது? இருக்கவா முடியும் அப்படி?

எந்த ஏகாதிபத்யம் 240 ஆண்டுகளாக மாஹி வட்டாரத்தைத் தன்னுடைய சட்டைப் பைப் பொருளாகக்கருதி ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவந்ததோ, எந்த ஏகாதிபத்யம் எத்தகைய பேராபத்து வந்துற்றாலும் சரியே—மாஹி பகுதியை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று

அவனி அதிர அதிர் வேட்டு கிளப்பி வந்ததோ, எந்த ஏகாதிபத்யம் பலம் பொருந்திய பிரிட்டிஷ் வல்லரசு இந்தியாவை விட்டு வெளியேறிய காட்சியைக் கண்ட பிறகுகூட தன்னிடமிருந்த இந்தியப் பகுதிகளை விடுதலை செய்ய முடியாது என்று திமிர்வாதம் பேசி வந்ததோ, எந்த ஏகாதிபத்யம் இன்னமும் புதுச்சேரியிலே விடுதலைப்போர் தொடுத்து வரும் வீர உள்ளங்களின் மீது அடக்குமுறை அம்புகளை ஓயாமல் தொடுத்தபடி இருக்கிறதோ எந்த ஏகாதிபத்தியம் இந்தியாவில் மட்டுமல்ல, இந்தோ சீனா—டுனீசியா—மொராக்கோ—முதலிய பற்பல பகுதிகளில் இன்னமும் ஏகாதிபத்யப் பேயாட்டத்தை விடாமல் நடத்தி வருகிறதோ, அப்படிப்பட்ட ஏகாதிபத்யம், தன்னுடைய ஆணவ ஆட்டத்தை ஜூலை 16ம் தேதி பகல் 12—மணியோடு முடித்துக் கொள்ள வேண்டிய கட்டம் பிறந்துவிட்டது மாஹியில் என்றால், அந்தக் கட்டம், அந்த வட்டாரத்தின் கவர்னராக இது வரை இருந்த பிரஞ்சு அதிகாரிக்குப் புன்னகையை அளிக்கும் பூரிப்பான நிகழ்ச்சியாகவா இருக்க முடியும்? ஐயோ-பிரஞ்சு வல்லரசு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய வேளையும் பிறந்து விட்டதே—என்ன அக்கிரமம் என்ன அக்கிரமம் என்று தானே அவருடைய உள்ளம் பதை பதைத் திருக்கும் அந்த விநாடியில்!

மாஹி வட்டாரம், மிக மிகச் சிறியதோர் பகுதிதான். அதன் மொத்தப் பரப்பளவு 24 சதுர மைல்கள். அந்த வட்டாரத்தில் அடங்கிக் கிடப்பவை, மாஹி என்கிற துறைமுகப் பட்டினமும் வேறு மூன்று கிராமங்களும் தான். மாஹிப் பட்டினத்து மக்கள் தொகை 6000 ஏனைய மூன்று கிராமங்களிலும் வாழ்பவர்களின் மொத்த தொகை 9000 ஆகமொத்தம் மாஹி வட்டாரத்தின் மக்கள் தொகை 15,000 தான். மலையாளப் பகுதியில், கள்ளிக்கோட்டை என்னும் நகரத்திலிருந்து 40 மைல்களுக்கு வடக்கே அமைந்திருக்கிறது இந்த வட்டாரம்.

மிக மிகச் சிறிய பகுதிதான் இது. ஆனால் இந்தச் சிறிய பகுதியைத்தான் விட முடியாதென்று மிக மிகப் பிடிவாதம் காட்டி வந்தது பிரஞ்சி ஏகாதிபத்யம் இது நாள் வரை.

1947-ம் ஆண்டில் பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறி விட்டது. அதன் பின்னாலேயே பிரான்சும் இந்தப் பூபாகத்தை விட்டு விட்டு வெளியேறி யிருக்க வேண்டியது தான் நியாயம்.

இரண்டு நூற்றாண்டு காலம் அகில உலகத்தையும் ஆட்டிப் படைத்த செல்வாக்கு மிகுந்த வல்லரசு பிரிட்டன்.

எங்களுடைய ஆட்சியில் சூரியன் அஸ்தமிப்பதே கிடையாது என்று சொல்லிக் கொள்கிற

அளவுக்கு, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும், தனக்கென்று ஓர் ஆதிக்கத்தைப் பெற்றிருந்த பேரரசு, பிரிட்டன்.

அகில உலக வியாபாரத் துறையிலே, சமீப காலம் வரையில், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் தனிக் காட்டு அரசனாக விளங்கி வந்த நாடு பிரிட்டன்.

அதன் பலமும் செல்வாக்கும் அதிகார எல்லையும் குறைந்து விட்ட இன்றைய நிலையில் கூட உலகத்தின் மூன்றாவது முக்கிய வல்லரசாகக் காட்சியளிக்கிற நாடு பிரிட்டன்.

இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, ஆப்பிரிக்காவில் பல தொகுதிகள், இத்தனை நாடுகளும் ஒரு காலம் இல்லாவிட்டாலும் மற்றொரு காலத்திலே பிரிட்டிஷ் வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துதான் இருக்கின்றன, பிரிட்டனின்! செல்வாக்கு அந்த அளவுக்கு ஓங்கி வளர்ந்திருந்தது.

என்றாலும் பிரிட்டன் இந்தியாவை விட்டு அகன்று விட்டது 1947-ல்.

பிரிட்டனேவெளியேறியபிறகு பிரான்ஸ் ஏன் தயக்கம் காட்ட வேண்டும்?

இனி இந்த துணைக் கண்டத்தைக்கட்டியாள நம்மால் ஆகாது என்று எண்ணி யானையே வெளியே சென்று விட்டது, இந்தப் பூனையாலா அந்தக் காரியம் முடிந்துவிடும்?

• சிங்கத்தால் முடியாதது இந்தச் சுண்டெலியாலா நடந்துவிடும்?

சீறிப் பாயும் சிறுத்தையால் ஆகாத செயல்,பதுங்கிப் பாய்ந்து ஒதுங்கி ஒளிந்து வாழும் இந்தக் குள்ள நரியாலா முடிந்துவிடும்?

மன்னாதி மன்னனெனப் பெயர் வாங்கிய பிரபல பயில்வானே பயந்து ஓடுகிறார், இந்நிலையில் புல் தடுக்கிகள் புரண்டு விழக்கூடிய இந்த நோஞ்சுக் குஞ்சாலா ஏகாதிபத்யக் கொடியை உயர்த்திப் பிடிக்க முடியும்?

முடியாது என்பதை அனைவரும் அறிவர். ஆனால் அறிய மறுத்தது பிரான்ஸ்.

பிரிட்டனாலேயே முடியாத காரியம் தன்னால் மட்டும் முடிந்துவிடும் என்று பகற் கனவு கண்டு வந்தது.

எப்படியும் தன்னுடைய ஆட்சியை இங்கே என்றென்றும் நிலை நாட்டிக் கொண்டிருக்க முடியும் என்று ஆகாயக்கோட்டை கட்டி வந்தது.

அந்தக் கோட்டை இடியத் தொடங்கி விட்டது ஜூலை 16ம் நாளன்று.

மாஹி விடுதலை பெற்றுவிட்டது.

புது வாழ்வு அங்கே தொடக்கமாகி விட்டது.

மக்கள் தொடுத்த அறப்போர் வெற்றி புரியை அடைந்து விட்டது,

பிரெஞ்சு ஏகாதிபத்யமே வெளியேறு என்று இங்கே எழுந்த இடியோசை அந்த ஏகாதிபத்யத்தின் இரும்பு உள்ளத்தைக்கூட ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

ஏகாதிபத்யம் பணிந்து விட்டது—அல்ல அல்ல—பணியும்படி செய்யப்பட்டது. மக்கட் போராட்டத்தின் மகத்தான ஆற்றலால்.

காலம் மாறிவிட்டது என்பதை உணர்ந்து கண்ணியமான முறையில் பிரான்ஸ், தானுகவே விலகி விடும் மாஹியைவிட்டு என்று அங்குள்ள மக்கள், 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் முதல் 1954-ம் ஆண்டு மே திங்கள் 7-ம் நாள் வரை பொறுமையுடன் காத்துக் கிடந்தனர்.

ஆனல் பொறுமை பலன் தரவில்லே, எனவே பொங்கி யெழுந்தனர் மே 8-ம்நாள். பிரஞ்சு ஏகாதிபத்யத்தைத் தங்கள் பகுதியிலிருந்து வெளியேற்ற அறப்போர் தொடுத்தனர்.

போர் மும்முரமாக நடைபெற்றது. மக்களின் ஆர்வம் கடல் அலேயெனப் பொங்கி யெழுந்தது.

மிரட்டல், உருட்டல், அதிகார ஆர்ப்பாட்டம், அடக்குமுறை வெறியாட்டம், அத்தனே ஆயுதங்களேயும் பயன் படுத்திப் பார்த்தது பிரஞ்சு வல்லரசு.

பயன்? பூஜ்யம்!! ஆட்சித் தேவதைகள் வீசிய அந்த ஆயுதங்கள் தான் புறிந்து விழுந்தனவே தவிர மக்களின் போராட்ட உள்ளம் முறியவில்லே. அவர்களின் ஆர்வமும் ஆவேசமும் அழியவில்லே. அவர்களின் நேர்மைத் திறமும் நெஞ்சு உரமும் குலேயவில்லே.

அடக்க அடக்க ஓங்கியெழும் பந்துபோல அடக்குமுறை வலுக்க வலுக்க அறப் போரின் ஆற்றலும் அளவும் பலமடங்கு வலுத்தன. பிரான்ஸ், பணிந்தது. மாஹி, விடுதலே பெற்று விட்டது.

பிரஞ்சு ஏகாதி பத்யத்தின் கடைசி அத்தியாயத்திலே ஒரு பகுதி முடிவடைந்து விட்டது.

இன்னமும் மூன்று பகுதிகள் மிச்சமிருக்கின்றன.

அந்தப் பகுதிகளேயும் எழுதி முடித்துவிட வேண்டும் பிரான்ஸ்.

மாஹி வட்டாரம் விடுதலே பெற்று விட்டது. புதுச்சேரி, காரைக்கால், ஏனம் ஆகிய மூன்று வட்டாரங்கள் இன்னமும் விடுதலே பெறவில்லே. அறப்போர் முழக்கமும் அடக்குமுறை ஆர்வமும் அங்கெல்லாம் இன்னமும் நடந்தபடி இருக்கின்றன.

மாஹறிப் பகுதியில், காட்டிய சமயமறிந்து நடக்கும் சாதுர்யத் தனத்தை, பிரான்ஸ், அங் கெல்லாமும் காட்டவேண்டும். பிரான்ஸ், அப்பகுதிகளிலிருந் தும் கண்ணியமாக அகன்று விட வேண்டும்.

பிரிட்டிஷ் வல்லரசைப் போலத் தன் கடமையையும் காலத்தின் போக்கையும் உணர்ந்து கண்ணியமாக வெளியேறாமல் ஏகாதிபத்ய ஆட்டமாடிக்கொண்டிருக்கிறதே பிரான்ஸ், இது, அதன் பழங்கால புகழைக் குழி தோண்டிப் புதைக்கும் பாதகச் செயலாகும்.

சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் என்கிற மூன்று மாணிக்கங்களை—ஈடு இணையற்ற கோமேதகங்களை—ஒப்பு உயர்வற்ற இலட்சிய முழக்கங்களை உலகுக்கு அளித்தானே உத்தமன் ரூசோ அந்தப் பேரறிவு பெருநிதி பிறந்த நாடு இந்த பிரான்ஸ்.

''எனக்கு நன்றாகத் தெரியும் மன்னனின் கையில் செங்கோல் இருக்கிறது' அவன் தன் விரலை அசைத்தால், போர் வீரர்கள் என்னைப் பழிவாங்க வருவார்கள். மதகுருவின் கையில் ஜெபமாலை இருக்கிறது. அந்த மாலை அசைந்தால், ஆயிரக்கணக்கானவர்கள் என்னை அடித்துத் துரத்த முனைவார்கள். என்றாலும் மன்னன், மதகுரு, இருவரையும் நான் எதிர்க்கிறேன் ஏனெனில் செங்கோல், ஜெபமாலை, இரண்டையும் விடப் பலம்பொருந்திய பேனா இதோ என் கையில் இருக்கிறது'' என்று அஞ்சா நெஞ்சுடன் முழக்கமிட்டு விட்டு, பகுத்தறிவுப் போர் பல நடத்தி, பதுங்கிக்கிடந்த பாமரர் உள்ளத்தில் புரட்சிப் பொறிகளைத் தூவினானே எழுத்து மன்னன் வால்டேர், அந்த மாவீரன் தோன்றிய பூமி, பிரான்ஸ்.

ரூசோவும், வால்டேரும், டிடரோவும் மான்டஸ்குவும், இன்னும் எண்ணற்ற எழுத்துச் சிற்பிகளும் சொற்போர் வீரர்களும் தூவிய புரட்சி விதைகள் முளைத்து வளர்ந்து பிரமாண்ட உருவம் பெற்று, அரண்மனைகளைத் தூள் தூளாக்கி அரசனின் ஆணவத்தைத் தவிடு பொடியாக்கிற்றே அந்த மகத்தான புரட்சி நடைபெற்ற நாடு பிரான்ஸ்தான்.

பிரான்ஸ் என்றவுடனே நமக்கு முன்பெல்லாம் இத்தகைய இன்ப நினைவுகள் தான் தோன்றுவது வாடிக்கை.

ஆனால் இப்போதோ?

அதோ இந்தோசீனு! அங்கே சொந்த நாட்டுமக்கள் மீதுகுண்டுகளை வீசும் வேற்று நாட்டுப் பீரங்கிகள் எங்கிருந்து வருகின்றன தெரியுமோ பிரான்சிலிருந்து!

இதோ இருப்பது டுனீசியா! இந்த நாட்டில் விடுதலையார்வம் கொண்டு வீறியெழுந்துள்ள வீர இளைஞர்களைச் சித்திரவதை செய்து சிறைக்குள்ளே தள்ளியும் மரண தண்டனை கொடுத்து மயா

ன புரிக்கு இழுத்துச்சென்றும் கோர நடனம் புரியும் கொடுங்கோல் யாருடையது அறிவீரோ? பிரான்ஸ் நாட்டினுடையது.

பக்கத்திலே இருக்கும் நகர் புதுச்சேரி அங்கே நிமிர்ந்து நின்று கூறுகிறார்கள் மக்கள்—ஏகாதிபத்தியமே வெளியேறு என்று. ஆனால் அந்த நியாயமான கோரிக்கைகளுக்கு எந்த வகையான விடை கிடைக்கிறது தெரியுமோ சிறை, தடியடி, மித்திர பேதம், சித்திரவதை, இத்யாதி இத்யாதி விடையைத் தருபவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்!

இப்போது இப்படியெல்லாம் தான் செய்திகள் வந்து விழுகின்றன நம் செவிகளிலே!

ரூசோவின் புகழுக்கும், வால்டேரின் பேனாவுக்கும், பாரைக் குலுக்கிய பிரஞ்சுப் புரட்சியின் பெருமைக்கும் மட்டற்ற இழுக்கை இழுத்து வந்து சேர்க்கிறது பிரஞ்சு ஏகாதிபத்யத்தின் இன்றை வெறியாட்டங்கள்.

தொலைய வேண்டும் இந்தத் தவறான போக்கு; மீளவேண்டும் பிரான்சின் பழம்புகழ். மீளுமா? மீளமுடியுமா பிரஞ்சு நாட்டு அதிகாரவர்க்கத்தால் பிரான்சின் பழம் புகழ் மீளுமோ இல்லையோ அதனை நாமறியோம். ஆனால் ஒன்றை அறிவோம் நாம். பிரஞ்சு நாட்டிடம் சிக்கிக்கிடக்கும் புதுச்சேரி, காரைக்கால், ஏனம் ஆகிய பகுதிகள் மீண்டே தீரும், விரைவில் மீட்டே தீரும் மக்கள் சக்தி.

---

# ஆசிரியரைத் தாக்கியதற்குத் தண்டனை!

## கௌன்சிலர் உமாபதிக்கு ரூ. 201 அபராதம்!!

*(10—7—54)*

பள்ளிக்கூட நேரத்தில் வகுப்பில் வந்து ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் கையாலும், பிரம்பாலும் தன்னைத் தாக்கியதாக கார்ப்பரேஷன் கௌன்சிலர் ஜி. உமாபதி மீது சென்னை கார்ப்பரேஷன் ஆசிரியர் திரு. சூரியநாராயண ராவ் அவர்களால் தொடரப்பட்ட வழக்கில் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ரேட் கவுன்சிலர் உமாபதிக்கு ரூ. 201 அபராதம் விதித்தார்.

# போளூர் ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர் மானேஜர் சங்கம்

---

போளூர், ஜூன் 22—

போளூர் முஸ்லிம் திராவிய சகாயபாடசாலையில் ஸ்ரீ ஏ. தங்கவேல் உடையார் தலைமையில்சமீபத்தில் நடந்த போளூர்ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்மானேஜர்-மானேஜர்கள் சங்கக் கட்டிடத்தில் கடவுள் வணக்கத்திற்குப் பின் நடந்த நிர்வாகஸ்தர்கள் தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர் :—

ஸ்ரீமான்கள் ஏ. தங்கவேல் உடையார்—தலைவர், எஸ். கணேச நயினார்—உபதலைவர், எஸ். முத்துகுமாரசாமி பிள்ளை, செயலாளர்—கே. பஞ்சநாதன்-உபசெயலாளர், எல். கரியப் பிள்ளை—பொக்கிஷதார், வி. காசிமல் நாயுடு—காப்பாளர், ஜனுப்படேல் அல்லா பக்ஷ்—உதவி காப்பாளர்.

கவர்ன்மெண்டார் கல்வி விஷயமாக பிறப்பிக்கும் உத்தரவுகளை இச்சங்கத்திற்கு ஒரு நகல் அனுப்பும்படி கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென்றும்,

பயிற்சிபெற்ற ஆசிரியர்களையும் பயிற்சி பெறாத ஆசிரியர்களையும் கல்வி அதிகாரிகளிடம் பர்மிஷன் பெற்று நியமிக்க வேண்டும், நீக்க வேண்டும் என்ற உத்தரவு நிர்வாகஸ்தரின் பொறுப்பு இழக்கச் செய்வதால் அவ்வுத்தரவை ரத்து செய்து மாமூல் வழக்கம்போலவே நிர்வாகஸ்தர்களுக்கு உரிமை இருக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென்றும்,

1952–53–54 வருஷங்களில் விதிவிலக்கு கொடுத்துள்ள ஆசிரியர்களுக்கு கிராண்டு கொடுபடாமலும் இருக்கிறது. அதனால் மானேஜ்மெண்டுக்கு நஷ்டமுண்டாகிறது. ஆதலால் கொடாமலிருக்கும் விதிவிலக்குபற்றி புனராலோசனை செய்து வேலைசெய்த வரையிலாவது கொடுத்து கிராண்டுகளை உடனடியாக வழங்கும்படி கோருவதென்றும்,

மானேஜ்மெண்டு கிராண்டு நிர்வாக செலவுக்காக 15 சதவிகிதம் கொடுக்கப்பட்டது. அதைபிராவிடெண்ட்நிதி கட்டவில்லை, தோட்டம் அதிகமாக இல்லை, இடவசதி அதிகமாக இல்லை, இதையும் பல காரணங்களைக் கொண்டும் கட்டு செய்து 10, 7, 5, 2 1/2 சதவீதம் கிராண்டு கொடுத்தால் எப்படி நிர்வாகம் நடத்த முடியுமென்று அதிகாரிகள் புனராலோசனை செய்து நிர்வாகக் கிராண்டு 15 சதவிகிதத்துக்கும் குறைக்காமல் உடனடியாகக் கொடுத்து நிர்வாகங்களை ஆதரிக்கக்கேட்டுக் கொள்ளுவதென்றும்,

பாடசாலைக் கட்டிடங்களில் உள்ள தாழ்வார இடத்தை பாடசாலை நடத்திக்கொள்ளவும்பிள்ளை

களின் இடவசதி கணக்கில் சேர்த்துக்கொள்ளவும் வேண்டுமென்று கோரவும் பாடசாலை கண்காணிப்பாளர்கள் பரீட்சை காலங்களில் செய்யும் ரிப்போர்ட்டின் பேரில் ரெவ்யு உடனுக்குடன் ஒவ்வொரு நிர்வாகஸ்தருக்கும் அனுப்பும்படி அதிகாரிகளைக்கோருவதென்றும்,

ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வொரு ஆசிரியருக்கு 30 பிள்ளைகள் இருக்க வேண்டும் என்பது கிராமங்களில் அசாத்யமாய் இருப்பதால் பழைபடியே இருக்கும்படி உத்தரவளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென்றும்,

எல்லா உதவி பெறும் பாடசாலைக்கும் கட்டிட வாடகையை அரசாங்கத்தாரே கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுவதென்றும்,

திரவிய சகாய பாடசாலை நடந்துவரும் கிராம பிரதேசத்தில் 1 மைல் சுற்றுவட்டாரத்திற்குள் வேறு எவ்விதமான பாடசாலைகளும் திறப்பதற்கு அரசாங்கத்தார் அங்கீகாரம் கொடுக்கக் கூடாதென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருவதென்றும்,

நான்கு உபாத்தியாயர்களுக்கு மேல் வேலை செய்யும் பாடசாலை தலைமை ஆசிரியருக்கு டூட்டி அலவன்ஸ் கொடுக்கும்படி கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ந. வ.


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை—1.**

**மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

**ரிகார்ட் ஷீட்டுகள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

**பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

**பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்** (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

**வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்)** (ஆங்கிலம்) 100 ரூ 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.



Edited, Printed and Pubiished by P. Veeraraghavan at the 'Venkatesen Press' 94/95, New St., Mannady, Madras—1.